விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 115

## நாளை அமெரிக்காவில் மாநாடு புலிகளுக்கு அழைப்பில்லை

# டோக்கியோ மாநாட்டை புலிகள் பகிஷ்கரிப்பர்!

## நேற்று அதிரடி அறிவிப்பு

(கிளிநொச்சி)

**ஜூன் மாதம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தினைப் பகிஷ் கரிக்கப் போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளனர்.**

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் டோக்கியோவில் நடை பெறுவதற்கு முன்பதாக நாளை திங்கட் கிழமை அமெரிக்காவில் நடை பெறவுள்ள முன்னோடிக் கூட்டத்திற்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்து விடுதலைப் புலிகள் கிளிநொச்சியல் உள்ள தமது தலைமைச் செயலத்தில் இருந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்ட முடிவினை அறிவித்துள்ளனர்.

ஜூன் மாதம் டோக்கியோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்பு, நாளை வாஷிங்டனில் அமெரிக்க,இலங்கை கூட்டுத் தலைமையில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான முன்னோடிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்காமை குறித்து விடுதலைப் புலிகள் அதிருப்திய்ய வெளியிட்டு விடுத்துள்ள அறிக்கையில் மேலும்

(10ம்பக்கம் பார்க்க)

### இந்தியத் தூதுவர் லலித் கோன்சிங் கலந்து கொள்வார்

(கொழும்பு)

வாஷிங்டனில் நாளை நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டிற்கு,இந்தியா சார்பாக அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் லலித் கோன்சிங் கலந்து கொள்ளவுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அனுப்பிய கடிதம்

## கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கிடைக்கவில்லை!

(கொழும்பு)

இலங்கையின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சனுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுப்பய கடிதம் அவருக்கு கிடைக்கவில்லை என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்தமைக்கு ஜனாதிபதி செயலகம் ஆச்சரியம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி எழுதிய கடிதம் கண்காணிப்புக்குழுவிற்கு கிடைக்காமையை ஒட்டி ஜனாதிபதிச் செயலகம் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி எழுதிய கடிதம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு முகவரியிட்டு அவரது தலைமை அலுவலகத்திற்கு கடந்த 7ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் இக்கடிதத்தை கண்காணிப்புக்குழுவின் தலைவருக்குத் தான் அனுப்பி வைத்ததாக கண்காணிப்புக் குழுச் செயலாளர் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்துள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

## சமாதானப் பேச்சை மாலைதீவில் நடத்துக

### அந்நாட்டு அரசு கோரிக்கை

(மாலைதீவு)

அரசுக்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளுக்கமிடையே தற்போது நடைபெற்றுவரும சமாதான பேச்சுக்களில் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையை மாலைதீவில் நடத்துமாறு மாலைதீவு அரசு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாலைதீவு அரசு விடுத்துள்ள இக கோரிக்கைக்கு இலங்கை அரசு எதுவிதமான பதிலும் அனுப்பாத நிலையில் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் அடுத்த மாதம் 6ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக கொழும்பில் உள்ள மாலைதீவு தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு அடுத்த மாதம் இலங்கை வரவுள்ள மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(வ)

## இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஐ.நா.உறுப்பு நாடுகள் உதவ வேண்டும்

### ஐ.நா.செயலர் கோபி அனான் வேண்டுகோள்

(நியூயோர்க்)

இலங்கையின் சமாதான முயற்சி வெற்றி அடைய ஒத்துழைப்பு வழங்குமாறு ஐ.நா.அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஐ.நா அமைப்பின் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.செயலர் கோபி அனானை நியுயோர்க்கில் அவரது அலுவலகத்தில் வைத்து பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த் மொறகொட நேற்றுச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது யப்பான் தலைநகர் டோக்கியோவில் எதிர் வரும் ஜூன் மாதம் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு பற்றி விரிவாக கலந்துரையாடியதாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதான முயற்சிகளின் மூலம் சர்வதேச நாடுகளில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள மதிப்பும் தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் பொருளாதார அபிவிருத்தியினால் ஏற்பட்டுள்ள முன-னேற்றமும் தனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக

(10ம்பக்கம் பார்க்க)

## கைதடிச் சிறுவர் இல்லத்தில் பாலியல் துஷ்பிரயோகம்?

### சந்தேகத்தின் பேரில் விடுதிப் பொறுப்பாளர் கைது

### 22 சிறுமிகள் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதி

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில்,22பேர் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சைவச் சிறுவர் இல்லத்தில தங்கியிருக்கின்ற சிறுமிகளை அதன் நிர்வகிப்போர் பலவந்தமாக அச்சுறுத்தி பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுத்துவதாக சாவக்ச்சேரி நீதிமன்ற நீதிவான் எஸ்.அரியநாயகத்திற்கு அப் பகுதிப் பொது மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இம் முறைப்பாட்டை அடுத்து உண்மை நிலையைக் கண்டறிவதற்காக,சிறுவர் இல்லத்தில் விசாரணை நடத்துமாறு நீதிபதி சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)



கைதடியில் அமைந்துள்ள சைவச் சிறுவர் இல்லம்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுவிளம்பரம்


## சோதிட வகுப்புக்கள்

அடுத்த மாதத்தில் புதிய இலவச சோதிட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ளோர் பதிவுகளை நேரில் மேற்கொள்ளலாம். ஞாயிறு முற்பகல் சண் மாஸ்ரர் குளப்பிட்டி ஒழுங்கை, (வைரவர் கோவிலடி) கொக்குவில். (6900)


## விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சிறுமி ஒருத்தியை கடத்திச் சென்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக கூறப்படும் குருநகரைச்சேர்ந்த நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் யாழ்மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் அதே இடத்தைச் சேர்ந்த 15வயதுச் சிறுமியை ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைத்திருந்தார். கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்ட அவர் யாழ் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இதேவேளை,யாழ்ப்பாணம்ஐந்து சந்திப்பகுதியில் தந்தை ஒருவர் தனது மகளை பாலியல்வன்முறைக்கு உடபடுத்தமுயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.நேற்று முன்தினம் பிரஸ்தாப நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும்21ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-7)

## கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடும்

(கொழும்பு)

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 47ல் இருந்து 60 ஆக உயர்த்தப்படவுள்ளதாகக் கண்காணிப்புக்குழு தலைவர் ரெலவ்சன் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தற்போது 47 பேர்மட்டுமே இருப்பதனால் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து உடனுக்குடன் விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை என்றும்இதனாலேயே உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கபபட்டுள்ளது. (ம)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மக்கள் வங்கி 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கிடையே நடத்தவிருக்கும் பொது அறிவுப்போட்டிகளுக்கு விண்ணப்பங்களை ஏற்றுகொள்ளும் இறுதித் திகதி இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கி,யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதையர் அறிவித்துள்ளார்.

இப்போட்டி தொடர்பாக ஏதாவது விபரங்கள் தேவைப்படுவோர் அருகிலுள்ள மக்கள் வங்கிக்கிளை முகாமையாளருடன் அல்லது பிராந்திய தலைமையலுவலகத்தில் 'சிசு உதான கணக்கு' இணைப்பாளர் வ. சிவச்சந்திரதேவனுடன் நேரிலோ அல்லது தொலைபேசி இல.222 2602 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாமெனவும் மக்கள் வங்கி யாழப்பாண பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (உ)

## கசிப்பு விற்பனை மும்முரம்

(வேலணை)

தீவகப்பகுதிகளில் மீண்டும் கசிப்பு விற்பனை தீவிரமாகி உள்ளது.

ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு போன்ற இடங்களில் கசிப்பை அருந்தி விட்டு அட்டகாசம் புரிவோர் தொகை அதிகரித்து காணப்படுகிறது.

தீவகப்பகுதி தவிர ஏனைய பிரதேசங்களில் சட்டவிரோத கசிப்பு விற்பனை செய்பவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வரும் போது இப்பகுதிகளில் எவ்வித தடையுமின்றி இவ்வியாபாரம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-47)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

### உடல் எண்~8

### உயிர் எண்~4

8,17,26 போன்ற திகதியில் பிறந்து,பிறந்த திகதி,மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் இவர்கள் சனி,இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு உயரமானவர்களாகவும் கம்பீரமானவர்களாகவும் இருப்பர். சிலர் குள்ள்மானவர்களாகக் காட்சியளிப்பர். முன் பற்கள் இரண்டு பெரிதாக இருப்பதோடு சிலருக்குச் சநதுள்ள பல்வரிசையாகவும் ஒழுங்கற்ற பற்களாகவும் இருக்கும். அத்தோடு தலை முடியும் விரைவில் உதிர்ந்து விடும் தன்மை கொணடவை .பிறர் கட்டுப்பாட்டின் கீழ் வாழாது சுதந்திரமாக வாழ ஆசைப்படுவர். பல்வேறு வழிகளில் அனுபவங்கள் பெற்றிருப்பதால் இவர்களை நண்பர்கள் மதிப்பர். தான் கண்ட ஒவ்வொரு நிகழ்சிகளையும் வருணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள்.மற்றவர்கள் தன்னைப்பற்றி அபிப்பிராய பேதம் கொள்வார்களே என்று எண்ணாது தன் மனத்தில் பட்ட கருத்துக்களைக்கூறிவிடுவர்.

### பிடிவாதக்காரர்

விவாதத்தன்மை கொண்ட இவர்கள் விவாதங்கள் செய்கின்ற போது தனது கருத்துக்களை விட்டுக் கொடுக்காது பேசுவர். இதனால் பிடிவாதக்காரர் என்று பலர் கூறுவர். குழந்தைகள் மீதும் மிருகங்கள் மீதும் அதிக அன்பு செலுத்துவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் இளமையிலேயே காதல் வயப்பட்டு கஷ்டத்திற்குள்ளாகின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விட்டால் நல்ல வாழ்க்கைத்துணைவர் நல்ல குழந்தைகள் நல்ல ஆரோக்கியம் நிறைந்த செலவம் அமையப் பெற்று வீடு வாகன வசதிகளோடு சிறப்புற்று வாழ்கின்றனர்.

ஞாபக மறதி கொண்ட இவர்கள் சிலநேரங்களில் முன் கோபியாகவும் காணப்படுவர். உத்தியோகம் பார்க்கும் பலர் வருமானம் போதவிலலையென்று தனது முயற்சியால் தொழில் மூலம் பொருள்தேட ஆசைப்படுவர்.போராட்டமான வாழ்க்கையாக இருந்தாலும் படிப்படியாக உயர்நத முன்னேற்றத்தைப்பெறுவர். தொழில் செய்கின்ற இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் தொழில்மூலம் பெரும் பணம் சம்பாதித்து உயர்ந்த இடத்தை வகிப்பர்.

பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் பசி என்று யார் சொன்னாலும் உடனே உதவ முன்வருவர். பெற்றோர் மேல் அன்பு கொண்டஇவர்கள் தன்னால் முடிந்த உதவியை கடைசிவரை செய்து கொண்டே இருப்பர். தெய்வ நம்பிக்கைகொண்டவர்களாதலால் சமயத்திற்கும், தெய்வத்திற்கும் என்ன சம்பந்தம் என்று ஆராய்வர்.தனக்குப் பொருத்தமான வாழ்க்கைத்துணை அமைந்து விட்டால் பொருளாதார மேம்பாடு கூடிக்கொண்டே இருக்கும்.

### கடமையுணர்வு

எல்லோரும் விரும்பும்படி நடந்து கொள்ளும் இவர்கள் பிடிவாதக் குணத்தையும் வாதம்செய்வதையும் குறைத்துக்கொண்டால் பலருடைய ஆதரவையும் நன்மதிப்பையும் பெறலாம்.தேவையற்ற கரியங்களில் இறங்கி மாட்டிக்கொண்டு பின் வருந்துவர்.இந்த எண்ணிக்கையில் டாக்டர், எஞ்சினியர்,நல்லாசிரியர்கள், கலைஞர்கள்,அரசாங்க ஊழியர்கள்,கம்பனி நிர்வாகிகள் போன்றோர் அதிகம் காணப்படுகின்றனர்.

கடமையுணர்வு கொண்ட இவர்கள் எப்பொழுதும் கண்ணியம் மிகுந்தவர்களாக வாழ்கின்றனர். சாஸ்திரம்,சமயம்,சட்டம்,மருத்துவம்,ஜோதிடம்,பொறியியல் போனறவற்றில் ஆராய்ச்சி இருக்கும் .ஆனால் எதிலும் நிரந்தரமாக மனம் லயிக்காது. இயற்கைக்காட்சிகளையும் மலைப்பிரதேசங்களையும் மிருகங்கள் வாழும் மிருகக்காட்சிச்சாலைகளையும் நீர் வீழ்ச்சிகளையும் கடல் பிரதேசங்களையும் கண்டு மன அமைதி கொள்வர்.இவர்களுக்கு பெயர் ஒழுங்காக அமையாவிட்டால் மேற் குறிப்பிட்ட நற்பலன்கள் குறைந்து வாழ்க்கை சூனியமாகவும், போட்டியும், பொல்லாப்பும், தீயவழிகள் நிறைந்ததாகவும் காணப்படும். இப்படிப்பட்ட சிலருக்கு பெயரை பெருத்தமான எண்ணில்

**சோதிடபலன்**

மாற்றி அமைத்துக் கொடுத்து இன்புற்று வாழ்வதைக் கண்டிருக்கிறேன்.

### தொழில்

இவர்களுக்கு இரும்பு சம்பந்தமான அனைத்துத்தொழிலும் சிறந்தவையே.எழுதுதல்,பேசுதல், பத்திரிகை,வாகனம்,ஒப்பந்த வேலைகள் ஏஜென்சி, பல்பொருள் வியாபாரம் போன்றவை அனைத்தும் சிறந்தவையே.

### நோய்

மனக்குழப்பம் ,இருதயவலி, உஷ்ண சம்பந்தமான அனைத்து நோயகளும், மூட்டுவலி வயிற்றுவலி, முதுகுவலி, இரத்தஅழுத்தம் போன்றவைகள் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

புதன் ,சுக்கிரன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77 போன்ற எண்களிலும் 15,24,33,42, 51,60,69போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.சூரிய ஆதிக்கமான 19,37,46,64,போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக்கொள்வது சிறந்ததாகும்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-5,6.யோகமான திகதிகள்-5,14,23,6,15,24,1,10, 19,28.யோகமான மோதிரக்கல் நலக்கல்,வெளிர்நீலக்கல், கோமேதகம்.யோகமான நிறம் நீலம்,மஞ்சள் ஆகாத திகதி8,17,26.ஆகாதநிறம் கறுப்பு,சிவப்பு.8,17,26,4,13,22,31 போன்ற திகதிகள் ஒதுக்கப்படவேண்டியவைகளாக இருந்தாலும் எதிர்பாராத நன்மைகள் அளிப்பவை.

### உடல் எண்~8

### உயிர் எண்~5

8,17,26போன்ற திகதியில் பிறந்து,பிறந்த திகதி,மாதம், வருடம்,ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் இவர்கள் சனி, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரத்துடனும் சிறிது மதந்த கண்களுடனும் காட்சி அளிப்பர். உழைத்து உயர்வை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இவர்கள் எப்பொழுதும் சுறு சுறுப்பாக காட்சியளிப்பர். மன திடம் கொண்ட இவர்கள் சில நேரங்களில் குழம்பிவிடுவர். சிலர் ஆரம்பத்தில் வசதிபடைத்தவர்களாகவும்,இன்னும் சிலர் தனது இளமைக் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகி,எதிர் நீச்சல் போட்டு ஏற்றமான வாழ்க்கையை அடைவர்.

பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் வாழ்க்கை முழுவதும் போராடிக்கொண்டே இருப்பர். பொருளாதார நிலை ஏறவும், இறங்கவுமாக இருக்கும்.ஆனால் பெயர் நன்றாக அமையப்பெற்றவர்கள் உத்தியோகம் செய்தாலும்தொழில் செய்தாலும் உயர்ந்த நிலையை அடைந்து வீடு,வாகனம்,நிலம்போன்ற அனைத்து வசதிகளுடன் வாழ்கின்றனர். இவர்கள் மனம் புதுமையான எலக்ட்ரானிக் கருவிகள், தொழில் கூடங்கள்,அழகான வாகனங்கள், மலைப்பாங்கான இடங்கள், கடற்கரை போன்றவற்றைக்கண்டு மகிழ்ச்சி அடைவர்.வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும என்ற நோக்கோடு சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டு இருப்பர். இவர்களுக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் சுறு சுறுப்பில்லாதிருந்தால் இவர்களுக்கு கோபம் உண்டாகும்.

### புதிய திட்டங்கள்

தன்னைப்போல் மற்றவர்களும் விரைவில் ஒரு காரியத்தை முடிக்காதிருக்கின்றார்களே என்று வருந்துவர்.எப்பொழுதும்புதிய திட்டங்களைப்போட்டு பணம் ஈட்டும் நோக்கத்துடன் இயங்கிக்கொண்டிருப்பர். இந்த எண்ணில் பெரிய தொழில் அதிபர்கள், எஞ்சினியர்கள், டாக்டர்கள், வக்கல்கள்,அரசாங்க ஊழியர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு பெயர் நன்றாக பொருத்தமான எண்ணில் அமைந்து விட்டால்,படிப்படியாக முன்னேறி நல்ல ஆரோக்கியம்,நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

பெயர் நன்றாக அமையாவிட்டால் போட்டியும், பிரச்சினைகளும் குடும்பச்சிக்கல்களும், ஆணாக இருந்தால் பெண்களாலும், பெண்ணாக இருந்தால் ஆண்களாலும் மன வேதனைக்குள்ளாகின்றனர். இதனால பெயரை நல்லஎண்ணில் மாற்றி அமைத்துக்கொள்வது அவசியம். இவாகள் எந்த ஒரு புதிய பொருளைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து ரசிப்பர்.எஞ்சினியரிங் சம்பந்தமான அனைத்துப்பொருட்களும் இவர்களின் மனதைக்கவரும்.தன்வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற குறிக்கோளாடு அயராது உழைக்கும் இவர்கள் சோம்பேறியாகிவிட்டால் நன்றாக தூங்கி விடுவர்.

### சிந்தனையாளர்

பலருக்கு உதவி செய்யும் எண்ணம் கொண்டஇவர்கள் தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்வர்.பலர் போற்றும் மனிதராக வாழும் இவர்கள் எப்பொழுதும் சிந்தனையுடனே காணப்படுவர். ஜோதிடம், சமயம்,சட்டம்,கணிதம், கலை போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். எந்தக்காரியத்தில் இறங்கினாலும் தைரியமாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்பட்டு வெற்றியைத்தேடிக்கொள்வா.பெயர்பொருத்தமாக இவர்களுக்கு அமைந்து விடுமேயானால் இவர்கள் வாழ்க்கை எல்லா விதத்திலும் வெற்றிகரமாக இருக்கும்.தூரதேச பயணங்களை மேற்கொள்வதால் ஓரிடத்தில என்ன பொருள் கிடைக்கிறது, அந்தப்பொருளை எங்கு அனுப்பினால் நல்ல இலாபம் பெறமுடியும் என்று எண்ணுவர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்களுக்கு எப்பொழுதும் ஆண்டவன் அருள் உண்டு .

**ஆர். ஐ. துரைமுருகர்**

எல்லாவிதமான பழக்கங்களையும்பழகி எதற்கும் அடிமையாகாது விட்டுவிடுவர்.ஆனால் பெயர் மோசமான எண்களில் அமைந்து விட்டால்,தீயபழக்கங்களுக்கு அடிமையாகி வியாதியால் பீடிக்கப்படுவர். சமயத்திற்கும்,தன் சமுதாயத்திற்கும தன்மொழிக்கும் உயர்வு தேடித் தரவேண்டும் என்று எண்ணுவர். இப்படிப்பட்ட இவர்களுக்கு பெயர் ஒழுங்காக அமையுமேயானால் சிறந்த முன்னேற்றம் அடையலாம.

### தொழில்

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு கற்கள் சம்பந்தமான அனைத்துத்தொழிலும்சிறந்தவையே. மின்சாரம்,வாகனம்,கமிஷன்,ஒப்பநத வேலைகள்போன்ற தொழில்களும் மருந்து, எஞ்சினியரிங் சம்பந்தமான தொழில்களும்ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்கு பொருள்களை அனுப்புவதன்மூலம் உள்ள தொழில்களும் சிறந்தவையே.

### நோய்

மனக்குழப்பம் சம்பந்தமான நோய்களும்,மூட்டுவலி, முதுகுவலி,கண்வலி, இரத்தக்கொதிப்பு, சர்க்கரைசம்பந்தமான நோய்களும், மூலவியாதி, நரம்பு சம்பந்தமான நோய்களும் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும்முறை

சனி,புதன்ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கமான 5,14,23,32 ,41,50,59,77,15,24,33,42,51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்து கொள்ளலாம்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-5,6,1 யோகமான திகதி 5,14,23,6,15,24, 1,10,19, 28 யோகமான மோதிரக்கல் நீலக்கல், வையிரம்.யோகமான நிறம்-நீலம், மஞசள், சாம்பல்நிறம்.ஆகாத திகதி - 8,17,26ஆகாத நிறம்-கறுப்பு, சிவப்பு.8,17,26போன்ற திகதிகளில் தாங்களாக ஒரு காரியத்தை செய்யக்கூடாது,ஆனால் எதிர்பாராத நன்மை அிளிக்கவல்லது. (தொடரும்)

## காவலூர் அபிவிருத்தி குறித்து நேரில் சென்று ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச அபிவிருத்தி கருதி யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையிலான குழு அண்மையில் அங்கு விஜயம் செய்தது.

ஊர்காவற்றுறையில் கடந்த காலங்களில் அபிவிருத்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டு இது வரையும் அமுல்படுத்தாத திட்டங்களை மேற்கொள்வதென இக்குழு முடிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் மெலிஞ்சிமுனை பிரதான வீதி, கண்ணகை அம்மன் இறங்கு துறை என்பன புனரமைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்,நாடாளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா, பிரதேச செயலர்கள் ஆகியோர் அபிவிருத்தி தொடர்பாக ஆராயச் சென்ற இக்குழுவில் அடங்கியிருந்தனர். (உ-10)

## சுமார் 2அரை இலட்சம் பேர் உயர் தர பரீட்சைக்குத் தோற்றுவர்

(கொழும்பு)

இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு விடைத்தாள்கள் புத்தகமாக கட்டப்பட்ட நிலையில் விநியோகிக்கப்படும் என்று பரீட்சைத்திணைக்கள மேலதிக ஆணையாளா அனுரா எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

12 பக்கம் கொண்ட சிறு புத்தகங்களாக இவை இருக்கும்.விடைத்தாள்களை வெளியே எடுத்துச் செல்வதை இம்முறை தடுக்கும் எனறு அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் சுமார் இரண்டரை இலட்சம் பரீட்சார்த்திகளில் 970 பேர் ஆங்கிலத்திலும்,சில பகுதிகளை தமிழ் அல்லது சிங்களத்திலும் விடையளிக்க வருக்கின்றனர்.

இதற்காக இவர்களது வினாத் தாள்களுக்கு உரிய மொழி பெயர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகள் விரும்பும் பட்சத்தில் மொழி பெயர்ப்பைப் பெற்று விடையளிக்கலாமாயினும் அதற்காக மேலதிக நேரம் வழங்கப்படமாட்டாது .

திணைக்களத்திற்கு பாடசாலை அதிபர்களூடாக இவ்விதம் விண்ணப்பித்தாலன்றி மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் வைத்து பரீட்சைக்கு தோற்றும் மொழியை மாற்றமுடியாது.

2003 ஆம் ஆண்டில் ஏ.எல் பரீட்சைக்கு 2 இலட்சத்து 12 ஆயிரத்து 194 பாடசாலை மாணவர்களும்39ஆயிரத்து533 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் விண்ணப்பித்துள்ளனர். பரீட்சை ஏப்ரல் 21 தொடக்கம் மே 20 வரை நடைபெறும். இடையே வெசாக் பண்டிகைக்காக சில நாட்கள்இடைவெளிவிடப்பட்டிருக்கும்.

எதிர் காலத்தில் உயர்தரப் பரீட்சை ஏப்ரல் முதல் வாரத்திலேயே நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகன்றன என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மஹிந்த விஜயசிறீ மேலும்தொரிவித்துள்ளார் . (உ)

# அடிமைத்தனத்தை எதிர்க்கின்ற மக்களின் இலட்சியத்தை விலைபேசிவிற்க முடியாது

## வான்முழக்கம் ஆண்டுமலர் வெளியீட்டில் மாவை. எம்.பி

(தென்மராட்சி)

போர் இடம்பெற்ற காலத்திலும பார்கக இ்போதுளள சமாதான காலம் மிகவும் ஆபத்தானதாகவிருக் கின்றது. இக்காலத்தில் எம்மக் கள் மீது அனுதாபமும், அக்கறை யும் கொண்டவர்கள் போல காட்டிக்கொள்ளும் உள்நாட்டு வௌநாட்டு சக்திகளின் ஊடுருவல சம்பவங்கள் இடம்பெற்றுவருகின் றன. எனவே நாம் விழிப்பாக இருக்கவேண்டியது மிகமிக அவசியமாகும்.

தமிழர்தேசியக் கூட்டமைப் பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா திருநெல்வேலியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வான்முழக்கம் சஞ்சிகையின் முதலாவது ஆண்டு மலர் வெளியீட்டுவிழாவில் உரையாற் றும்போது இவ்வாறு குறிப்பிட் டார்.

மாவை சேனாதிராஜா அங்கு தொடர்ந்து பேசும்போது,

சமுதாயத்தில் துன்பத்தை விளைவிப்பவர்கள் அன்றி துன் பத்தை அனுபவிப்பவர்களும் தாங்கிக்கொள்பவர்களும் தான் இறுதியில் வெற்றி கொள்வார் கள். இலட்சியவாதிகள் தமது இலட்சயங்களிலும் இலக்குகளில் இருந்தும் எக்காலத்திலுமே விலகமாட்டார்கள். எங்கு ஒழுங்கு, கட்டுப்பாடு, அடிமைத்தனத்தை எதிர்க்கின்ற போக்கு இருக் கினறதோ அங்கே இலட்சியம் விலை பேச முடியாததாகிவிடும்.

இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் பத்திரிகைகள் துரித வளர்ச்சியை அடைந்துள்ளன. நாம் தொழில் நுட்பத்துறைக்குப் போக வேண்டும். எம்மத்தியில் கட்டப்பட்ட அத்திபாரம் அழியுண்டு போகாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். அலைகளால் நாம் அள்ளுண்டு போகாவண்ணம் இருக்கவேண்டும். தமிழ்த்தேசியத் தின நன்மை கருதி உருவாக்கப் பட்ட தமிழ்க்கூட்டமைப்பின் ஒற்றுமை பலப்படுத்தப்பட வேண் டும். தேரையும் அதன் சில்லுகளை யும் அழித்துவிடமுடியாது.

ஜனநாயகசக்தியும், ஆயுத பலமும் இன்று ஒருவழியில் சென்று கொண்டிருக்கும் போது தனிமனிதர்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்காக அரசியல் பலிக்கடாவாக நாம் ஆக்கப்படக் கூடாது. தமிழ்த்தேசியத்தன் ஸ்மையை வளர்த்தெடுக்கும் சீரிய பணியில் வான்முழக்கம் சஞ்சிகை தொடர்ந்தும் அதன் பணியை ஆற்ற வேண்டும் எனக் குறிப் பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு உரையாற்றும் போது,

எமது போராட்டம் இன்று இறுதிக்கட்டத்தினை அடைந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் தானாகவே இறங்கிவந்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை செய்வதற்கு வந்துள்ள தெனின் அதற்கு முக்கிய காரணம் சமபலந்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இருந்த போதிலும் கூட, எம்மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமையைக் குலைப்பதற்கு தீய சக்திகள் முயற்சித்து வருகின்றன. ஒற் றுமையே எமது பலம். ஏறிவந்த ஏணியை நாம் தட்டிவீழ்த்தக் கூடாது.

தென்னிலங்கை இனவாதசக்தி கள் பற்றியும் முஸ்லிம் தீயசக்தி கள் பற்றியும் நாம் மிகவும் கவன மாக இருக்கவேண்டும். இப்போதுள்ள சமாதான சூழ்நிலையைக் குழப்பிவிடுவதற்கு பலர் முயன்று வருகின்றனர். அரசு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரல்வேண்டும். தவறும் பட்சத்தில் வெளியக சுயநிர்ணய அடிப்படையில் நாம் தனியரசை அமைப்போம். அதைத்தவிரவேறு மார்க்கம் எதுவும் கிடையாது என்றார்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக பங்குகொண்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அங்கு உரையாற்றும் போது,

வான்முழக்கம் சஞ்சிகை எமது மண்ணின் வாசனையுடன் வெளிவரவேண்டும். தமிழ் மக்களின் இலட்சியங்களையும், சுதந்திர வேட்கை உணர்வையும் எடுத்துச் சொல்கின்ற ஊடாகமாக இது மென்மேலும் மிளிரவேண்டும். இச் சஞ்சிகை எமது மண்ணையும் மக்களையும் நேசித்து அதன் ஆக்கங்களைவழங்கவேண்டும்என்றார்.

சஞ்சிகையின் முதலாவது பிரதியை பாராளுமன்ற உறுப் பினர் அ.விநாயகமூர்த்தி, பாராளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜாவுக்கு வழங்கி வைத்தார்.

இவ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையின் துணைப்பொறுப்பாளர் யோகன, பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திர குமார், சமாசத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் எஸ். கஜேந்திரன் ஆகியோரும் உரை யாற்றினர்.

சஞ்சிகையின் ஆசிரியர் வே. தவச்செல்வன் ஏற்புரை நிகழ்த் தினார். (உ-77)

## திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் "பியானிஸ்ட்" (பியானோவாசிப் பவர்) என்ற ஆங்கிலத் திரைபபடம் இன்று முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண் பிக்கப்படவுள்ளது. (த)

## வெளிவாரிப் பிரிவு கலைமுதற் தேர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப் பட்டப்படிப்பிற் கான கலைமுதற்தேர்வு - 2001 ற்கான பரீட்சை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி தொடக்கம் யாழ். பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்தலும இடம்பெறவுள்ளன.

இதற்கான நேர அட்டவணை களையும பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத் தில் வந்து இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்பாக யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் மே நடுப்பகுதியில் இலங்கை வருகை

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தகவல்

(கொழும்பு)

இலஙகைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொனறு மே மாதம் நடுப்பகுதி யில் இலங்கைக்கு வருகை தரவுள் ளதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கொத்மலை நீர்த்தேக்கத்தை காமினி திஸ்ஸ நாயக்க நீர்த்தேக்கமாக பெயர் மாற்றம் செய்யும் வைபவத் தில கலந்து கொண்டு உரையாற்றுகை யில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய பிரதமர்,

இலங்கை வரும் இக் குழுவினர் போர்ச் சூழல்காரணமாக பாதிக்கப் பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு, அரசாங்கத்துடன் இதுதொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

அத்துடன், நாட்டின் இன்றைய பொருளாதாரம மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரை யாடவுள்ளனர்.

கடந்த 20 வருடங்களாக நாட்டில் யுத்தம் நடைபெற்றுவந்த தால், இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் தடைப்பட் டன. இதனால் நாட்டின் பொருளா தார மற்றும் அபிவிருத்திப்பணி களில் ஸ்தம்பிதம் ஏற்பட்டது.

தற்போது, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம கைச்சாத்திடப்பட்டு, சமாதானப் பேச்சு வார்த்தைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பல பல உலக நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

இந்நாடுகளின் பிரதிநிதிகள் மே மாதம் இலங்கைக்கு வந்து இங்குள்ள நிலைமைகளை ஆராயந்து, அது தொடர்பாக பேச்சு வார்த்தைகளையும் நடத்தவுள் ளனர்.

எதிர்வரும் ஜூன்மாதம் 25ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இதனடிப்படையில் அவர்கள சிபார்சுகளை செய்யவுள் ளனர் என்று தெரிவித்துள்ளார். (உ-8)


# மக்கள் வங்கி

## அறிவித்தல்

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையிலும், சங்கானைக் கிளையிலும் 31-12-1984 வரை அடகு வைத்த இதுவரை மீட்கப்படாத நகைகள், யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் பின்வரும் திகதிகளில்

## பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| கிளைகளின்விபரம் | ஏலம்விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை | 10-05-2003 லிருந்து 12-05-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |
| சங்கானை | 13-05-2003 லிருந்து 17-05-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி

(C/5991)

# சதாம் ஆட்சி கவிழ்ந்து விட்டதா? அரபு நாடுகளில் மக்கள் அதிர்ச்சி

(கெய்ரோ)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்ந்துவிட்டதா? ஈராக் படைகள் எங்கே சென்றன? அமெரிக்கப் படைகளை உள்ளே விட்டுவிட்டு பக்தாத் மக்கள் விழாக் கொண்டாடுவது போல் சந்தோஷப்படுகிறார்களே? அவர்களுக்கு என்ன ஆனது? என்று பெரும்பாலான அரபு நாடுகளில் உள்ள மக்கள் அதிர்ச்சியும் வேதனையும் கலந்த முகத்தோடு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்க-இங்கிலாந்துக் கூட்டுப் படைகள் பக்தாத், பஸ்ரா உட்பட பல்வேறு நகரங்கள் மீது கடந்த 3 வார காலமாக அதிபயங்கர போர் விமானங்களைக் கொண்டு குண்டு மழை பொழிந்தன.

ஈராக்கின் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் இரு பிரிவுகளாக பிரிந்து நாட்டின் மையப்பகுதியில் இருந்த பக்தாத் நகரை நோக்கி அமெரிக்க-இங்கிலாந்துப் படைகள் இருமுனை தாக்குதலை. தொடுத்து பக்தாத் நகரையும் பஸ்ரா நகரையும் நெருங்கினர்.

சதாம் ஹுசைனின் குடியரசுப் படை தாக்குதலையும் மீறி அவர்களை தங்களுடைய நவீன பீரங்கிகளாலும் டாங்கிகளாலும் சுட்டு வீழ்த்திவிட்டு கடைசியில்எந்த எதிர்ப்பும் இல்லாமல் தலைநகர் பக்தாத்தையும் இரண்டாவது பெரிய நகரமான பஸ்ராவையும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் கைப்பற்றிவிட்டன.

ஏவுகணைகளாலும் அமெரிக்கப் போர் விமானங்களின் குண்டு மழைகளினாலும் பக்தாத் நகரில் உள்ள சதாம் ஹுசைனின் அரண்மனைகள், அரசு அலுவலகக் கட்டடங்கள், இராணுவ மையங்கள், தொலைக்காட்சி நிலையக் கட்டடம், ஹோட்டல்கள், குடியிருப்புப் பகுதிகள் என்று பல்வேறு கட்டடங்களையும் துளைத்தெடுத்த அமெரிக்கக் கூட்டுப்படையினர் பக்தாத்திற்குள் நுழைந்து சதாம் ஹுசைனின் சிலைகளையும் தகர்த்து எறிந்தன.

### வாழ்த்தியவர்கள் தூற்றுகின்றனர்

பக்தாத் நகரின் மையப்பகுதியில் கம்பீரமாகக் காட்சி அளித்த சதாம் ஹுசைனின் மிக உயரமான பிரம்மாண்டமான சிலையை தகர்த்த அமெரிக்கப் படையினரோடு சேர்ந்து கொண்ட பக்தாத் மக்கள் சதாம் ஒழிக, புஷ் வாழ்க என்று கூறி கீழே சாய்ந்த சதாம் ஹுசைனின் சிலையை செருப்பாலும் கற்களாலும் அடித்தது ஒரு புதிய காட்சியாகத் தென்படுகின்றது.

போருக்கு முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை எதிர்த்து கோஷம் போட்டவர்கள், தற்போது சதாம் ஹுசைனுக்கு எதிராக கோஷம் போட்டது விந்தையாக இருக்கிறது.

பக்தாத் நகரில் தற்போது நடக்கும் சம்பவங்களை கட்டார் நாட்டு தொலைக்காட்சியான அல்-ஜசீரா தொலைக்காட்சியும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் அபுதாபி தொலைக்காட்சியும் அப்படியே படம் பிடித்து அதை தங்களது செயற்கைக் கோள் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்தன. (பி)

# ஈராக் மீளமைப்புக்கு உதவுக? உலக வங்கிக்கு புஷ் அழைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ், உலக வங்கி மற்றும் உலக நிதி அமைப்புக்களை எதிர்கால ஈராக்கின் மீள் கட்டுமானப் பணியில் பங்கேற்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் அமெரிக்க அதிபரின் இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு ஐ.நா வின் அனுமதியைப் பெற வேண்டும் என சம்பந்தப்பட்ட அமைப்புகள் கூறியிருக்கின்றன.


எதிர்கால ஈராக்கின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் போது ஐ.நா அதில் கட்டுப்பாடுகளை விதித்து அதனை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.



இந்த நிலையில் அமெரிக்கா இவ்வாறான வேண்டுகோளை விடுத்திருப்பது, ஈராக் மீதான அமெரிக்காவின் ஆதிக்க நிலையை எடுத்துக் காட்டுவதாக மேற்கத்தைய அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-9)

# நிதானமிழந்து பேசுகிறார் ஜெயா வை.கோபாலசாமி கண்டனம்

(புதுடில்லி)



தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிதானம் இழந்து செயற்படுவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச செயலாளர் வை.கோ குற்றம் சுமத்தியுள்ளார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் இளைஞரணித்தலைவர் மு.க.ஸ்ராலின் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே வை.கோ இவ்வாறு கூறியிருக்கின்றார்.

வீரப்பன் விவகாரத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதியினைத் தொடர்பு படுத்தி ஜெயலலிதா பேசி வருவதற்கும் வை.கோ இச்சந்தர்ப்பத்தில் கண்டனம் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, ஸ்ரானில் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து சட்டசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வியாழனன்று வெளிநடப்புச் செய்திருப்பதுடன், மதுரை உட்பட தமிழகத்தின் வெவ்வேறு இடங்களிலும் இந்தக் கைதுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ராணி மேரிக் கல்லூரிக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும், மாணவிகளைப் போராடத் தூண்டியதாகவும் குற்றம் சாட்டப் பட்டே ஸ்ராலின் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.. (பி-9)

# நியூயோர்க்கை விட்டு ஐ.நா.வுக்கான ஈராக் தூதர் வெளியேறுவார்

(நியூயோர்க்)

ஐ.நா.வுக்கான ஈராக் தூதுவர் நியூயோர்க்கை விட்டு வெளியேறப் போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க மற்றும் பிரிட்டன் படைகள் தங்கியுள்ள ஈராக்கை பிரதிநிதித்துவப்படுத்த தாம் விரும்பவில்லை என்றும் ஈராக்கின் தூதுவர் மொகமட் அல்டூரி அறிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவில் இருந்து நேரடியாக பிரான்ஸிற்கு சென்று அங்கிருந்து சிரியா செல்ல இருப்பதாக அவர் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, ஈராக்கின் தூதுவர் தொடர்ந்தும் ஐ.நா.சபையில் செயலாற்ற வேண்டும் என்று இராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆயினும் ஈராக்கின் நிலைமை குறித்து நேரடியாக அறிய வேண்டிய தேவை இருப்பதாகவும் தூதுவர் மொகமட் அல்டூரி சுட்டிக்காட்டியுள்ளார். (உ-9)

# புத்தகக் கண்காட்சியில் பிரி.பங்கேற்கத் தடை

(லண்டன்)

எதென்ஸ் நகரத்தில் நடைபெறவிருக்கும் உலகப் புத்தகக் கண்காட்சியில் பிரிட்டன் கலந்து கொள்ள முடியாது என்று அந்தக் கண்காட்சியின், ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஈராக் மீதான போரில் பிரிட்டன் கலந்து கொள்வதற்கு இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்ளும் எழுத்தாளர்களும், கலைஞர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையை அடுத்தே இந்தக் கண்காட்சியில் இருந்து பிரிட்டன் விலக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியின் இறுதி நாள் சிறப்பு நிகழ்ச்சியாக போர் எதிர்ப்புப் புத்தகக கண்காட்சி இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஈராக்கை புனரமைப்பதில் புதுப்புது சர்ச்சைகள்

(பக்தாத்)

ஈராக்கைக் கட்டியெழுப்புவது தொடர்பாக புதிய சர்ச்சைகள் எழத் தொடங்கியுள்ளன.

ஜி.7 நாடுகளின் நிதியமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டை அடுத்து, இந்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.

ஈராக்கை எவ்வாறு கட்டியெழுப்புவது? மற்றும் அவற்றிற்கு யார் தலைமை தாங்குவது? போன்றவற்றாலேயே எழுந்திருப்பதாக கூறப்படுகிறது.

தவிரவும், ஈராக்கிற்கான நிதி உதவிகளைத் திரட்டுவதிலும் நெருக்கடிகள் எழத் தொடங்கியுள்ளன.

ஜி-7 நாடுகளில் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி ஆகியன அங்கம் வகிக்கின்றன (உ-9)

### பயணிகள் கப்பல் பாறையுடன் மோதியது

(புதுடில்லி)

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இருந்து விசாகப்பட்டணம் நோக்கிச் சென்ற பயணிகள் கப்பல் ஆயிரத்து 500 பயணிகளுடன் நடுக்கடலில் பாறையுடன் மோதியுள்ளது.

எனினும், பயணிகளின் உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்றும், புறப்பட்ட இடத்திற்கே கப்பல் திரும்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

WORLD NEWS உலக தரிசனம்

### இன்சாட்—3 சரியாக செயல்படுகிறது

(புதுடில்லி)

இந்தியாவின் பலநோக்கு இன்சாட் 3 ஏ செயற்கைக் கோள் இப்போது விண்வெளியில், இடை நிலைச் சுற்றுப் பாதையில் செல்கிறது.இது கயானாவிலுள்ள ஒரு தீவிலிருந்து விண்வெளியில் செலுத்தப்பட்டது. 860 கிலோ மீற்றரில் இருந்து 11500 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட சுற்றுப் பாதையில் இந்த செயற்கைக் கோள் புவியை வலம் வருகிறது.

இந்த செயற்கைக் கோளில் எல்லாக் கருவிகளும் நன்றாக செயற்படுகின்றன என்று பங்களூரில் உள்ள தலைமைக்கட்டுப்பாட்டு மையம் தெரிவிக்கின்றது. (பி-9)

### உலகச் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி

(பக்தாத்)

ஈராக்கின் எண்ணெய் வளம் மிக்க வடபகுதி நகரான கிர்குக் அமெரிக்கக் கூட்டணிப் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் உலக சந்தையில் சுத்திகரிக்கப்படாத எண்ணெயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

நியூயோர்க்கில் எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு 1.39 டொலர் குறைந்து 27.46 டொலராக உள்ளது. லண்டனில் எண்ணெயின் விலை 78 குறைந்து பீப்பாய் ஒன்றிற்கு 24.47 டொலராகஉள்ளது. (பி-9)

### பேரழிவு ஆயுதங்கள் எங்கே?

(வாஷிங்டன்)

ஈராக் மீது போர் நடத்திய போதிலும் அங்குள்ள பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் கூறினார்.

பேரழிவு ஆயுதங்களும் அதைத் தயாரிக்கும் தொழில்நுட்பமும் வெளிநாடுகளுக்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார். (பி)


# பாக். ஏவுகணைத் திட்டத்திற்கு சீன நிறுவனங்கள் உதவி

## சி.ஐ.ஏ.தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பல நாடுகளிடம் இருந்தும் குறிப்பாக ஐரோப்பாவிலிருந்தும் அணுஆயுதம் தயாரிப்பது தொடர்பான சாதனங்களை பாகிஸ்தான் தொடர்ந்து பெற்று வருகின்றது என்றும், சீன நிறுவனங்கள் பல பாகிஸ்தானின் பாலிஸ்ரிக் ரக ஏவுகணைத் திட்டத்திற்கு உதவி வருகின்றன என்றும், அமெரிக்காவின் மத்திய உளவு விசாரணை அமைப்பு சி.ஐ.ஏ. கூறியுள்ளது.

சீன நிறுவனங்களின் உதவியுடன் ஷஹீம், அப்ஹலி போன்ற குறுந் தொலைவு பாலிஸ்ரிக் ரக ஏவுகணைகளை உற்பத்தி செய்வதில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கின்றதாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தனது அறிக்கையில் சி.ஐ.ஏ. தெரிவித்திருக்கின்றது. (உ-9)




# ஈராக்கின் சட்டம், ஒழுங்கு அமெ. படைகள் வசமாகும்

(வாஷிங்டன்)

ஈராக்கில் உள்ள அமெரிக்கா தலைமையிலான இராணுவத்தினர் ஈராக்கில் சட்ட ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபட மாட்டார்கள் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கிலேயே ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாக அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறிப்பிடப்பட்ட ஒரு காலப்பகுதி வரை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் சட்ட ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய கட்டாயம் உள்ளதென்று மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் படைகள் பொலிசாருக்குரிய கடமைகள் தொடர்பான பயிற்சிகளைப் பெறாத போதிலும், அந்தக் கடமைகளைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை மேற்கொண்ட தாக்குதலால் அந்த நாட்டில் சட்ட ஒழுங்கு மீறப்பட்டுள்ளதுடன் வரலாறு காணாத வகையில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-9)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கூட்டணிப்படை உதவும்

## அதிபர் புஷ் உறுதி

(பக்தாத்)

ஈராக்கில் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு கூட்டணிப்படையினர் உதவுவார்கள். அதன் மூலமாக ஈராக்கியர்கள் பாதுகாப்பாக வாழ முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஈராக் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

ஈராக்கில் பாதுகாப்பு நிலை ஸ்திரமாக சிலகாலம் எடுக்கும் என்றும், ஈராக்கின் பொறுப்பு இராணுவ அதிகாரசபையில் இருந்து சிவில் நிர்வாகத்திற்கு மாறுவதற்கு இடையில் இடைக்கால அதிகார சபை ஒன்றிடம் கையளிக்கப்படும் என்றும் இந்த அதிகாரசபை ஐ.நா.வின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் வட அயர்லாந்தில் இருந்து ஈராக் மக்களுக்கு பதிவு செய்த செய்திகளை ஈராக்கிற்கு மேலாக பறந்த அமெரிக்க விமானப்படை விமானம் ஒன்று ஈராக் மக்களிற்காக ஒலிபரப்பியது. (பி-9)

# குறைந்த விலையில் தரமான பொருட்கள் ஒரே கூரையின் கீழ் !

முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

## Annai Nagaa Food City

பண்டிகைக்கு தினசரி தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

- காய்கறி வகைகள்
- மீன் வகைகள்
- இறைச்சி வகைகள்
- ஐஸ் கிறீம் வகைகள்
- மருந்து வகைகள்
- பழப் பாணங்கள்
- சிகை அலங்கார பொருட்கள்
- மளிகை பொருட்கள்
- டின் மீன் வகைகள்
- வீட்டுப்பாவனை பொருட்கள்
- தங்க நகைகள்

மேலும் பல...

புதுவருட அசத்தலான Offers

★ புது வருட விலைக் கழிவுகள்
★ புது வருட சலுகைகள்
★ ஒன்றை வாங்கி மற்றொன்று இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்
★ புது வருடத்தில் பொன்னான வாய்ப்புக்கள்

விரையுங்கள் !

இச்சலுகை கையிருப்பிலுள்ள வரை மட்டும்.




Flex Graphic

175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : (021) 2225515, (021) 2225223

# நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட தடைகள் பலவற்றைத் தாண்ட வேண்டும்

## நோர்வேத் தூதரக விசேட பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் உலகளாவிய ரீதியில் அது பல வெற்றிகளைக் கண்டு வருகின்றன. எனினும் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இரு சாராரும் இன்னும் பல தடைகளைத்தாண்ட வேண்டியுள்ளது.**

இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் விசேட பிரதிநிதி ஒஸார் லி கிறேட் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பயிற்சிக் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஒஸார் லி கிறேட் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கதான் முதன் முதலில் சமாதான விடயங்கள் தொடர்பாக இலங்கைக்கு உதவும்படி நோர்வே அரசை கேட்டிருந்தார்.

கட்சி மாறிய போதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே அரசாங்கத்தின் உதவியை தொடர்ந்தும் பெற்று மிகவும் சிரமமான சூழ்நிலையின் மத்தியிலும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

இரு இனங்கள் மத்தியில் ஏற்பட்ட போருக்கு முடிவு கட்டும் இச்சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நோர்வே அரசாங்கம் எதற்காக மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என சில அரசியல் வாதிகளும் விதண்டாவாதிகளும் வினா எழுப்புகின்றனர்.

இதற்குத் தெளிவானதொரு பதிலைத் தருவது அந்நாட்டு பிரஜை என்ற ரீதியில் எனது கடமையாகிறது.

நோர்வே நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை நிலவி வருகிறது. இதனால் ஏனைய நாடுகளில் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண உதவுவது நமது நாட்டுக் கொள்கையாக உள்ளது.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் உலக அரசியல் நிலைமையை ஸ்திரப்படுத்துவதுடன். மனித உரிமைகளையும் பேணிக்காக்கமுடியும்.

இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி பொருளாதார மற்றும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதே நோர்வே அரசாங்கத்தின் மற்றுமொரு கொள்கையாகும் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

### ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

# போர் நிறுத்த கால மோதல்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் ஆராய்வு

## இந்திய விஜயம் குறித்து அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கடற்படை மற்றும் இராணுவத்திற்கும் இடையில் கடல், தரைப் பிரதேசங்களில் ஏற்பட்ட எதிர்பாராத சம்பவங்கள் குறித்து ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தியாவுக்கு 4 நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார். இதுகுறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கடல் மற்றும் தரைப்பிரதேசங்களில் இவ்விரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட எதிர்பாராத சம்பவங்களினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை தமிழர்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணும் போது கொள்ளப்படவேண்டிய அரசியல் விடயங்கள், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு, அவர்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுதல்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியன குறித்தும் ஆராயப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது இந்திய விஜயத்தின் போது, இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி,, ஜனாதிபதி அப்துல் கலாம், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி, முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார், வெளிவிவகார அமைச்சர் யஸ்வத் சிங் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)



நேற்று முன்தினம் தமிழீழ மாணவர் பேரவையில் இடம்பெற்ற 'வான் முழக்க' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

### ஒரே மேடையில்

# 100 சோடிகளுக்கு இலவச திருமணம்

(காரைநகர்)

அகில இலங்கை ரீதியாக சமுர்த்தி அதிகாரசபையினால் 100 சோடிகளுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இவ்வருட இறுதியில் ஒரேமண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக தலா 4 வறிய திருமணம் செய்யவுள்ள சோடிகளைத் தெரிவு செய்து அதனடிப்படையில் இலங்கை ரீதியாக ஒரே நாளில் ஒரே மண்டபத்தில் இவ்வருட இறுதியில் இத்திருமண சேவை இடம்பெறவுள்ளது.

சமுர்த்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் முதலாவது இலவச திருமண சேவை நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ-246)

# மேதினத்தை எழுச்சியுடன் கொண்டாட குடாநாட்டில் விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்தி, தமிழ்த் தேசியத்தைப் பேணிக்காக்க உரிமையுடனும் உணர்வுடனும் உரத்த குரலெழுப்பி எமது ஒற்றுமையைப் பலப்படுத்தும் வகையில் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றுதிரட்டி மிகப் பெரிய அளவில் இம்முறை குடாநாட்டில் மேதினம் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது.

மேதின ஏற்பாட்டுக் குழு, மேதினம் தொடர்பாக நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்திய கலந்துரையாடலில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து புறப்படும் ஊர்திகள் மற்றும் பொது மக்கள் நல்லூர் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து மேதினப் பேரணி ஆரம்பமாகி பிரதான வீதியூடாக யாழ். மத்திய கல்லூரியை வந்தடையும்.

இம்மக்கள் பேரணி முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் முழு அளவிலான நிழற்படம் தாங்கி வரப்படும்.

அத்துடன், அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் இணைந்து மேதின அறைகூவல்களை பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள் வடிவில்வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கு.சிறில், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் யோகன் மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஞானவடிவேல், ஈ.பி.அர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் பல்வேறு மட்டத்தவர்களும் கலந்து கொண்டனர். (உ-7)

## தேசிய பயிற்சிப் பாசறை இன்று நிறைவு

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணியும் இணைந்து நடாத்தும் 11வது தேசிய பயிற்சிப் பாசறையின் இறுதி நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் இ.சற்குருநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரும் கௌரவ விருந்தினராக முன்னாள் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் பயிற்சியின் ஒழுங்கமைப்பாளருமான து.வைத்திலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-250)

## பொதுக்கூட்டம்

(சுதுமலை)

இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தலைவர் சி.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமை புரியும் சகல பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களையும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-252)

## தேர்த் திருவிழா

(சுதுமலை)

அராலி தெற்கு ஆகாயக் குள விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் புதனன்று தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-252)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில்கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன் நடந்தும் மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகம், சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக் கழகம் அகியன இதில் கலந்து கொள்ளவுள்ளன. (உ-10)


## பருத்தித்துறை நகரசபை

### வியாபார உரிமக் கட்டண அறிவித்தல்

1979ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாநகர சபைகள், நகர சபைகள்(திருத்தப்பட்டவாறான) கட்டளைச்சட்டம், 1985ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மாநகரசபை, நகரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் மேலும் திருத்தப்பட்டவாறான நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின்(255 ஆம் அத்தியாயம்) 162,164,165அ, 165ஆ, 165இ ஆகிய விதிகளின் கீழ் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் கொண்டு நடாத்திச் செல்லப்படும் வியாபார நிலையங்கள், தொழில் தாபனங்கள் ஆகியவற்றிடமிருந்து சென்ற ஆண்டு 25.04.2002 இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் நானாவித அறிவித்தல்கள் எனும் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு வியாபார உத்தரவுக்கட்டணம், தொழில் மீதான வரி ஆகியவை விதித்து அறவிடப்படும் எனவும் இக்கட்டணங்கள் 31.05.2003ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட்டு உரிய உரிமம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டுமெனவும் இத்தால் குறித்த கட்டளைச் சட்டத்தின் குறித்த விதிகளுக்கு அமைவாக அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**செயலாளர்,**
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்
பருத்தித்துறை.
2003.04.10 (கி-5990)




ஈராக்கிற்குள் நுழைந்த அமெரிக்கப் படையினரை வரவேற்கும் ஈராக்கிய மக்கள்



பஸ்ராவிலுள்ள அழிவடைந்த மாளிகையில் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர்



பக்தாத் திட்ட அமைச்சுக் கட்டடத்தை யு.எஸ் படைகள் தாக்கியதால் ஏற்பட்ட தீப்பிழம்பு



பக்தாத் யுத்தத்தில் அகப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தனது மகனுக்கு அருகில் கவலையுடன் தந்தை



# ஈராக்கோடு பாகிஸ்தானை ஒப்பிட்டுப் பேசுவது தவறு

## அமெரிக்கா

(இஸ்லாமாபாத்)

ஈராக்கை பாகிஸ்தானோடு ஒப்பிட்டு இந்தியா வெளியிட்டுள்ள கருத்தை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் நிராகரித்துள்ளார். அத்தோடு இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கை விட பாகிஸ்தான் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு வலுவான காரணங்கள் இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா இந்தியப் பாராளு மன்றத்தில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து பாகிஸ்தான் அரச தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஈராக்கையும், பாகிஸ்தானையும் ஒப்பிட்டுப் பேசுவது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இரண்டும் வெவ்வேறு சூழ்நிலை கொண்டவை என்றும், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் குறிப்பிட்டுள்ளார். (பி-9)

# ஈராக்கிற்கு எதிரான யுத்தம் தொடரும்

(வாஷிங்டன்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சி முடிவிற்கு வந்துள்ள போதிலும் யுத்தம் தொடரும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

சதாம் ஹுசைனின் ஆட்சி முடிவிற்கு கொண்டுவரப்பட்டதுடன் எமது பொறுப்பு முடிவடையவில்லை.

ஈராக்கிலுள்ள அழிவுதரும் ஆயுதங்களை முற்றாகக் களைய வேண்டிய பொறுப்பு எஞ்சியிருக்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் களையப்பட்டால் மாத்திரமே ஈராக்கும் ஏனைய நாடுகளும் அமைதியாக வாழ முடியும் என்று புஷ் கூறியுள்ளார்.

ஈராக் மீதான யுத்தத்தின் போது காயமடைந்த அமெரிக்க வீரர்களை வைத்திய சாலையில் சந்தித்து உரையாடிய போதே புஷ் இவற்றைத் தெரிவித்துள்ளார். (உ-9)

# ஈராக் தூதர்களிடையே கருத்து முரண்பாடு

(ஹனாய்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்ந்தது குறித்து வெளிநாடுகளில் உள்ள ஈராக் தூதர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

வியட்நாம் தலைநகர் ஹனாயில் உள்ள ஈராக் தூதர் சலா எல் முக்தார் கூறியதாவது;

ஈராக்கில் சதாம் ஆட்சி முடிவுக்கு வந்ததாக கூறுவது தவறு. போர் இன்னும் ஒரு மாதம், ஒரு வருடம், 10 வருடங்கள் கூட நடக்கும். பக்தாத்தில் போர் இன்னமும் முடியவில்லை.

அமெரிக்கப் படைகளை மக்கள் வரவேற்பதாக தொலைக் காட்சியில் காட்டப்படுகிறது. அந்த மக்கள் அனைவரும் ஈராக்கிற்கு வெளியே அமெரிக்கப்படைகளால் பயிற்சி அளிக்கப்பட்ட கூலிப் படைகள். பக்தாத் வீழ்ந்தாலும் மற்ற நகர்களில் போர் தொடரும் என்றார் அவர். மற்ற நாடுகளில் உள்ள ஈராக் தூதர்களுடன் பேசிய போது சதாம் ஆட்சி வீழ்ச்சியுற்றதாகக் கூறினர். எனினும் பக்தாத்திலிருந்து தகவலுக்காக காத்திருக்கிறோம் என்றனர் அவர்கள்.


சீனாவில் உள்ள தூதர் கூறியதாவது,

இரு வாரங்களுக்கு மேலாக பக்தாத்துடன் தொடர்பு இல்லை. புதிய அரசிடமிருந்து உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம் என்று கூறினார். கோலாலம்பூரில் உள்ள ஈராக் தூதரிடம் கேட்ட போது நாங்கள் வழக்கம் போல செயற்பட்டுக் கொண்டு இருக்கிறோம். பக்தாத்திலிருந்து இதுவரை தகவல் இல்லை என்று கூறினார். (பி)

# ஐ.நா ஆயுதப் பரிசோதகர் மீண்டும் ஈராக் செல்வர்



பக்தாத்தில் தமது பணிகளில் ஈடுபட்டுள்ள கூட்டுப்படையினரை ஆர்வத்துடன் பார்வையிடும் ஈராக்கிய பெண்மணிகள்



பஸ்ரா நகரில் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஈராக்கிய இளைஞர்கள்




பஸ்ரா நகரில் உற்சாகமாகக் காட்சியளிக்கும் ஈராக்கியச் சிறுவர்கள்




ஈராக்கிலுள்ள புனித நகருக்குள் கூட்டுப்படைகள் நுழைவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் ஈரானியர்





ஈராக்கில் நுழைந்த கூட்டுப்படைகளுக்கு கையசைத்து வாழ்த்துத் தெரிவிக்கும் ஈராக்கியர்



பக்தாத்திலுள்ள ஒரு பொலிஸ் காவல் நிலையத்திலிருந்து பொருட்களை சூறையாடுவதில் ஈடுபட்டுள்ள ஈராக்கியர்

# ஐ.நா ஆயுதப் பரிசோதகர் மீண்டும் ஈராக் செல்வர்

(பக்தாத்)

சதாம் ஹுசைன் பிறந்த நகரமான றிக்ஹிச்சிலும் பக்தாத் நகரின் பல இடங்களிலும் தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போரில் 20 ஈராக்கியப் ப்டையினரும், அமெரிக்கப் படையினா் பலரும் இறந்திருப்பதாக அமெரிக்கப்படைத்துறை அதிகாரி ஒருவா் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், ஐ.நா சபையின் ஆயுதப் பரிசோதனையாளர்கள் மறு படியும் ஈராக்கிற்குச் செல்ல இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் திட்டங்களிற்கு எதிராகவே கோபி அனானின் இந்த அறிவிப்பு வெளிவந்திருப்பதாக ச்வதேச அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

பாரிய இரசாயன அழிவு ஆயுதங்கள் இதுவரை கண்டு பிடிக்கப் படாத நிலையில் அதனைக் கண்டு பிடிக்கும் நோக்கில் அமெரிக்கா தனது சொந்த அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் கொண்ட குழு ஒன்றை அனுப்பஉள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)






பக்தாத்தில் ஓய்வு நேரத்தில் பத்திரிகை படிக்கும் கூட்டுப்படை களும், தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள படையினரும்



பக்தாத்தில் சதாமின் மாளிகைகளில் ஒன்றைக் கைப்பற்றிய பின் தனது தலைமையுடன் தொடர்பு கொள்ளும் யு.எஸ்.வீரர்



பஸ்ரா நகரில் அமெரிக்கப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி எரியும் ஈராக்கிய டாங்கி



அமெரிக்கப் படைகளின் பிடிகளில் உள்ள சதாமின் அரண்மனைகளில் ஒன்று

## இன்னும் ஒரு தகவல்

### தீவிர குருபக்தி

ஒரு நாள் ஒரு தகப்பனார் தன்னுடைய பிள்ளையை அழைத்துக் கொண்டு என்னிடம் வந்தார். "சார்! இவன் சரியாகப் படிக்கமாட்டேனென்கிறான். பெரியவர்களை மதிக்கமாட்டேனென்கிறான். நீங்கள் கொஞ்ச நாள் இவனுக்குக் குருவாக இருந்து நல்ல விஷயங்களைச் சொல்லிக்கொடுத்தால் நல்லது" என்றார். பெரியவர்களை மதிக்காதவன் எங்கே என்னை மதிக்கப் போகிறான்? யோசித்துப் பார்த்துவிட்டு "வேண்டாம் என்னை விட்டு விடுங்கள்" என்று சொன்னேன். அவர் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இல்லையென்றால் அவரே சிஷ்யனாகிவிடுவார் போலிருந்தது. வேறு வழியில்லாமல் அந்தப் பையனை எனது சீடனாக எடுத்துக் கொண்டேன்.

அவனுக்கு குருபக்தியென்றால் அது எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லிக்கொடுத்தேன். சதமர் என்று ஒரு குரு இருந்தார். அவருக்குத் 'துளசிசைதன்யன்' என்னும் பெயருடைய சீடன். நைஷ்டிகப் பிரமச்சாரி தன்னுடைய குருவுக்கு எந்த நேரத்தில் என்ன தேவை என்பதைப் புரிந்து கொண்டு சேவை செய்கிறவன். ஆனால் இவனைப் பற்றி மற்றச் சீடர்களுக்குப் பொறாமை வந்துவிட்டது. இவன் மட்டும் இப்படி இருக்கிறானே என்று! உடனே குருவிடம் போய் அவன் சரியாக இல்லை என்று கோள்மூட்டினார்கள். இருந்தாலும் இவைகளை அந்தக் குருநம்பவில்லை. யார் யார் எப்படியென்று அவருக்குத் தெரியும். துளசிசைதன்யன் பெருமையை மற்றைய சீடர்களுக்கு உணர்தவேண்டும் என்று நினைத்தார். அதற்கு ஒரு வழிபண்ணினார்.

ஒரு நாள் சீடர்களைக் கூட்டிக் கொண்டு ஒரு காட்டுவழியாகப் போய்க் கொண்டிருந்தார். அங்கே ஒரு பெரிய மலையருவி கொட்டிக் கொண்டிருந்தது. குருசீடர்கள் பக்கம் திரும்பி "இந்தமலையின் மேலிருந்து அந்தப் படுபாதாளத்திலே குதிப்பதற்கு யார் தயார்?" என்று கேட்டார். ஒரு சீடனும் வாயைத் திறக்கவில்லை. ஒதுங்கி நின்று கொண்டார்கள். பின்னால் மூட்டைமுடிச்சுக்களுடன் துளசிசைதன்யன் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்து "நீ மேலேயிருந்து அருவியிலே குதி என்றார். "அப்படியே செய்கிறேன் சுவாமி! என்றான். ஓடிப்போய் பொத் என்று குதித்துவிட்டான். அக்கணமே குருநாதர் தன்னுடைய யோகசக்தியினால் பறந்து போய் அவன் கீழே வீழந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார்.

மற்றையசீடர்களுக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. அடுத்தபடியாக இவனை மாட்டிவிடுவதற்கு என்ன பண்ணலாம் என்று யோசித்தார்கள். ஒரு நாள் வெற்றிலை இடிக்கிற சிறு உரலையும் உலக்கையையும் எடுத்து ஒழித்து வைத்துவிட்டார்கள். சதமகர் சன்னியாசி வெற்றிலை போடுபவர். பற்கள் சரியில்லாததனால் இடித்துத் தான் வெற்றிலை போடவேண்டும். திடீரென்று வெற்றிலை பாக்குக் கேட்டார். வழக்கமாக உரலில் இடித்துத் தருவது தான் துளசியின் பழக்கம். உரலைத் தேடினான் கிடைக்கவில்லை. என்ன பண்ணுவது? குரு கேட்டுவிட்டாரே! குருசேவை தானே முக்கியம். இவன் வெற்றிலை பாக்கை தன்னுடைய வாயில் போட்டு மென்றுஅதை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டான். குரு எதையோ படித்துக் கொண்டே இதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

துளசி இன்றைக்குத் தாம்பூலம் நன்றாக இடிக்கப்பட்டிருக் கின்றது. ருசியாக இருக்கிறது. அதை இடித்த பாத்திரத்தை

வடக்கு-கிழக்கு மாகாண

# மீள் நிர்மாணப்பணி நிதியத்திற்கு முதல் நிதி நோர்வேயிடமிருந்து

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாண மீள்நிர்மாணப்பணிகளுக் கான நிதியத்திற்கு முதலாவது பங்களிப்பு நோர்வேயிடமிருந்து கிடைத்துள்ளது.

சர்வதேச உதவிவழங்கும் நாடுகள், நிறுவனங்களிடமிருந்து இதற்கெனபெறப்படும் நிதியுதவிகள் உலகவங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிர்வகிக்கப்படும்.

நீண்டகால அபிவருத்திக்கு நோர்வே ஏற்கனவே உறுதியளித் துள்ள 16.5 மில்லியன் டொலர் களுக்கு இதுமேலதிகமான தாகும்.

இந்த நிதியத்திலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த வர்களுக்கான வீடமைப்பு, நீர் வசதி உடனடிப்பணத்தேவை போன்றவற்றிற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் கண்ணிவெடிகளை அகற்றுதலுட்பட சுகாதார தேவைகளுக் கும் இந்நிதியிலிருந்து பணம் செலவிடப்படும். முக்கியமாக போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், அநாதைகளின் உடல்நலம் பற்றிய பிரச்சினை களுக்கும், வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் இந்நிதியத் திலிருந்து உதவிகள் வழங்கப்பட வுள்ளது.

உலகவங்கியின் தென்னாசிய அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும், இருதரப் பினரும் இந்நிதியத்தை உருவாக்கு வதற்கும், சிக்கலான அரசியல் விடயங்களை பேசித்தீர்ப்பதற் கும் இணைந்து செயற்படுவது தமக்கு ஊக்கம் தருவதாயுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

(உ)

# போரினால் பாதிப்புற்ற குழந்தைகளின் உரிமைகளை கண்காணிக்க அமைப்பு

## சிறுவர் புனர்வாழ்வு செயலமர்வில் தீர்மானம்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கென புனர்வாழ்வு அளிப்பது பற்றிய இரண்டு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நிறைவடைந் துள்ளது.

மேற்படி இருநாள் இடம்பெற்ற செயலமர்வில் சிறுவர்களின் வாழ்வு நிலைகளைப் பற்றிய திட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

செயலமர்வின் இறுதியில் ஊடகங்களுக்கான அறிக்கை யொன்றும் வெளியிடப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையின் விபரம் பின்வருமாறு,

சிறுவர்களின் உரிமைகள், தொடர்பான பயிற்சி நெறிகள், தமிழீழ விடுதலைப்புலிகளுக் காகவும் இலங்கை அரசின் ஆயுதப் படையின்ரிற்காகவும் மற்றும் சமூகம் சார்ந்தவர்களுக்காகவும் சிறுவர்களின் உரிமைகள் பற்றிய நிபந்தனைகள் உள்ளடக்கி யிருக்கிறது.

இப்பயிற்சி நெறிபெரும்பாலும் இம்மாத இறுதிப்பகுக்குள் ஆரமபிக்கப்படுவது உத்தேசிக்கப பட்டுள்ளது.

மேலும், இத்திட்ட நடவடிக்கை மூலம் பெற்றோர் மற்றும் சமூகங் களுக்கிடையிலான விழிப்புணர்வு உள்ளடங்கலாக பாடசாலை அபி விருத்திச சங்கங்களை அபிவிருத்து செய்தல், போரினால் பாதிக்கப் பட்ட சிறுவர்களிற்கான சத்துணவுத் திட்டங்கள், அடிப்படைச் சுகாதார பராமரிப்புத் திட்டங்களின நிபந் தனைகள, பராமரிப்பு நிலையங்கள மூலம் பாதிக்கபபட்ட சிறுவர்களுக கான வசதி வாய்புக்களை ஏற்படுத் தல் போன்ற நடைமுறை பின் பற்றப்படும்.

இத்திட்டங்கள் அமுலாக்கப் படும் போது ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மற்றும் குழந்தைகள் பராமரிப்பு சேவை கள் திணைக்களம் ஆகியன அனுசரணை வழங்கவுள்ளன.

அத்துடன், வடக்கு- கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தை களின் உரிமைகளை கண்காணிப் பதற்கு ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நிர்வகிக்கப்படும் ஓர் கண் காணிப்பு செயற்பாடு தொடர்பான அமைப்பு பேணப்படும்.

இதேவேளை, இச்செயற்பாட்டுக் குழு வடக்கு-கிழக்கில் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக கான உபகுழுவுக்கு இந்ததிட்டம் தொடர்பான கலாண்டுவாரியான முன்னேற்ற அறிக்கையினை கையளிக்கும.

மேலும், இந்த திட்டநடவடிக்கை யனாது அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது சமர்ப்பிக் கும் முகமாக ஏப்ரல் 29ஆம் திகதிக்கு முன்பு தயாரிக்கப்பட்டு விடும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(உ-10)

## இராசி பலன்

13.04.2003

(பங்குனி 30, ஞாயிறு)

ஏகாதசி மு.ப. 10.03 வரை
மகம் பி.ப 2.08 வரை
இராகுகாலம் 4.36 - 6.06
சுபநேரம் 9.06 - 10.36

ஏகாதசி விரதம்

**மேடம்**
சிறுவியாதி, முயற்சிதாமதம், போசனசுகம், குடும்பக்கவலை

# ஏழாவது சுற்றுப் பேச்சு ஒஸ்லோவில்

## நோர்வே தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஏழாவது சுற்று சமாதானப்பேச்சுக் கள் முன்னர் திட்டமிடப்பட்டது தாய்லாந்தில் பரவியுள்ளதா லேயே இந்த மாற்றத்திற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

துளசி இன்றைக்குத் தாம்பூலம் நன்றாக இடிக்கப்பட்டிருக்கின்றது. ருசியாக இருக்கிறது. அதை இடித்த பாத்திரத்தை கண்ணால் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது என்று கேட்டார். "அதை மட்டும் அனுப்பிவை" நீ வரவேண்டாம் என்று வேறு சொல்லிவிட்டார். இதைக் கேட்டதும் துளசி தவித்துப் போய்விட்டான். இவன் போகாமல் எப்படி வாயை மட்டும் அனுப்பி வைக்க முடியும்? இவன் தவிப்பதைப் பார்த்ததும் மற்றைய சீடர்களுக்கு மனதினுள் மிகவும் சந்தோஷம்.

துளசி கொஞ்சமும் யோசிக்கவில்லை. வாளை எடுத்துத் தன் தலையை அறுத்து இன்னொரு சீடனிடம் எடுத்துக் கொண்டுபோ என்று கொடுத்துவிட்டான். கொண்டு போய்க் குரு முன்னால் வைத்தான். அந்தத் தலையில் வாய் திறந்திருந்தது. சிவப்பாக இருந்தது. வெற்றிலை போட்டுமென்றிருந்தது தெரிந்துபோய்விட்டது. அவனுடைய குருபக்தியை இப்போது எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். அதன் பின்னர் அந்தக்குரு சதமகர் தனது அற்புதத் திறமையால் அந்தத் தலையை மறுபடியும் ஒட்ட வைத்துவிட்டார். "துளசிக்கு உயிர்வந்துவிட்டது" என்று அந்தக் கதையைச் சொல்லி "துளசிசைதன்யனுடைய குருபக்தி எப்படி?" என்று என்னோடு இருந்தபையனிடம் கேட்டேன்.

"மிகவும் அபாரம்சார்!" என்று அடக்கமாகச் சொன்னான். நான் உடனே சும்மா விளையாட்டுக்காக "ஏனப்பா உன்னுடைய குருபக்தியை என்னிடம் காட்டுவதற்கு உன்னுடைய கழுத்தை நீயே அறுக்கவேண்டும் என்று நான் சொன்னால் அதை நீ செய்வாயா?" என்று அவனிடம் நான் கேட்டேன். "என்னுடைய கழுத்தை நானே அறுக்கவேண்டிய அவசியமில்லை சார்" என்றான் அவன். ஏனடா? என்றேன். "அதே காரியத்தைத் தான் இனிமேல் நீங்கள் தினமும் செய்யப் போகிறீர்களே சார்!" என்றான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

சிறுவியாதி, முயற்சிதாமதம், போசனசுகம், குடும்பக்கவலை

**இடபம்**

மாதா சுகம், மனச்சோர்வு, புதிய விடையம் அறிதல், காரிய தாமதம்

**மிதுனம்**

அன்னியர் சந்திப்பு, தனவரவு, காரிய ஜெயம், குடும்ப சுகம்

**கடகம்**

தொழில் கஷ்டம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், கற்பனை மிகுதி, தர்மம்

**சிங்கம்**

ஜனவசியம், காரியசித்தி, போசன சுகம், உறவினர் வருகை

**கன்னி**

சஜனசுகக்குறைவு, உணர்ச்சிவசப்படல்,எதிர்பாராத நன்மை, ரோகநிலை

**துலாம்**

காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி, புகழடைதல்

**விருச்சிகம்**

அதிகாரம், புதிய முயற்சி, நல்ல சம்பவம், சகோதரர் உதவி

**தனுசு**

கட்டுப்படுதல், பயந்த சுபாவம், காரிய தாமதம், கடும் வார்த்தை

**மகரம்**

எதிர்பாராத மனஸ்தாபம், விபத்துப் பயம, முயற்சி தாமதம், சிந்தனை மிகுத

**கும்பம்**

பெரியோரால் மதிக்கப்படல், குடும்பத்தில் குதுகலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவரவு

**மீனம்**

பகைவரால் நன்மை, ஜனவசியம், காரியஜயம், புதிய தொழில் சிந்தை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

(கொழும்பு)

ஏழாவது சுற்று சமாதானப்பேச்சுக்கள் முன்னர் திட்டமிடப்பட்டது போலனறி தாய்லாந்திலல்லாமல வேறு நாட்டில் நடைபெறலாம என்று ராஜதந்திரவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இடம்மாற்றுவது பற்றி ஆலோசிக்கப்பட்டதாயினும் எங்கு அதனை நடத்துவது என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஒஸ்லோ ஒருவேளை மாற்று நிலையமாக அமையலாம் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரமான சார்ஸ் தொற்று

லேயே இந்த மாற்றத்திற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஏழாவது சுற்று பேச்சுக்கள் ஏப்ரல் 29 தொடக்கம் மேமாதம் 2ஆம் திகதிவரை நடைபெறத்திட்டமிடப்பட்டுள்ளது. புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நலம் மிகச் சிறந்த ஒன்றாக இல்லை என்பதால் நோர்வே அனுசரணையாளர்கள் இது விடயத்தில் அதிகம் சிரத்தையெடுத்துள்ளனர்.

தாய்லாந்திலிருந்து ஒஸ்லோவுக்கு பேச்சுக்கள் மாறுமாயின் பாலா பிரயாணம் செய்யவேண்டிய நேரத்தில் குறைவு ஏற்படும். (உ)

# அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் அனுராவைச் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ், ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுராபண்டாரநாயக்காவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவைச சந்தித்து கலந்துரையாடல் நடத்த அஸ்லிவில்ஸ் முயற்சி எடுத்த போதும் ஜனாதிபதி 4 நாள் விஜயமொன்றை மோற் கொண்டு இந்தியா சென்றகாரணத்தாலேயே அனுராவைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எவை என்பது வெளிவரவில்லை. (உ-8)

## வாகன வசதியில்லை

(ஊர்காவற்றுறை)

வேலணை காலநடை வைத்திய நிலையத்திற்கு வாகன வசதி இல்லாமையினால்முழுமையான சேவையினை வழங்க முடியாது உள்ளதாகச சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படி வைத்திய நிலையம் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உரியதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள்.
—குறள்—

# வலம்புரி

## அர்த்தமற்ற மாநாடு

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு ஜூன் மாதம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னோடியாக அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் நாளை சிறப்பு மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கடந்த ஆண்டுகளிலும் நடைபெற்றுள்ள போதிலும் இம்முறை நடைபெறுகின்ற மாநாடு வித்தியாசமானது. அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதால், கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும் வெளிநாடுகளின் நிதியுதவி தாராளமாகத் தேவைப்படுகின்றது. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் நடைபெறுவதால் உலக நாடுகள் இலங்கைக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என நோர்வே அரசே வேண்டுகோள் விடுத்திருந்தது. அவ்வேண்டுகோளை மேலும் வலுப்படுத்து முகமாக இலங்கைக்கு உதவி வழங்கும் நோக்குடன் நோர்வேயில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டிருந்தது. இம்மாநாட்டில் விடுதலைப் புலிகளும் கலந்து கொண்டனர்.

எனினும், இந்திய அரசு இம்மாநாட்டைப் புறந்தள்ளி விட்டது. எனினும், நோர்வேயில் நடைபெற்ற மாநாட்டுக்கு அடுத்தபடியாக அமெரிக்காவில் மாநாடு நடத்துவதென்ற முடிவில், அம்மாநாட்டில் இந்தியாவை எப்படியும் பங்குபற்ற வைப்பதென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. அதற்கு அமைவாக நாளை அமெரிக்காவில் நடை பெறவுள்ள மாநாட்டில் இந்தியா பங்குபற்றுவது உறுதியாகி விட்டது. இச்செய்தி மகிழ்வைத் தந்தாலும், அந்த மகிழ்வோடு பெரும் அதிர்ச்சியும் காத்திருந்தது. அதாவது, இலங்

# நீதியுடனான நிரந்தரத் தீர்வு இலங்கையில் ஏற்பட இயேசுவின் ஆசியை வேண்டிப் பிரார்த்திப்போம்

அமைதியான ஒரு சூழ்நிலையில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு ஈஸ்ரர் விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் ஈஸ்ரர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

ஆண்டவர் இயேசு பாடுகள் மரணம் என்கின்ற வேதனை மிக்க நிகழ்வுகளைக் கடந்து உயிர்ப்பின் மகிமை அடைந்தார். இதன் வழியாக புது யுகத்தையும் புதிய வாழ்வையும் எமக்குப் பெற்றுத் தந்தார். உயிர்ப்பு விழா அல்லது பாஸ்கா விழா இதனை நினைவு கூர்ந்து கொண்டாடும் காலமாகும். ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்கின்ற நினைவுகளோடு எமது வாழ்வின் அநுபவ நிகழ்வுகளையும் இணைத்து அர்த்தம் காணும் விழாவே ஈஸ்ரர் விழாவாகும்.

**தமிழ்-சிங்கள புத்தாண்டும்** இதே காலப்பகுதியில் மலர்கின்ற வேளையில், இப்புத்தாண்டினை மகிழ்வோடு கொண்டாடும் அனைவரையும் நினைத்து அவர்களுக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

### ஈராக் யுத்தம்

போர்ச் சத்தங்களும், இறப்புச் செய்திகளும் இப்போது இல்லையென்ற நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற வேளையில், ஈராக் யுத்தமும் அதன் அழிவும் பற்றிய செய்திகள் எம்மை மீண்டும் மனோ ரீதியாகப் பாதிக்கத் தொடங்கி விட்டன.எமது பத்திரிகைகள் தாங்கி வருகின்ற இக்கொடிய போர் பற்றிய செய்திகள் உளவியல் ரீதியாக எமது மண்ணில் முன்பு நடைபெற்ற போரையும் அதன் இழப்புக்களையும், இறப்புக்களையும் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. யுத்தத்தைத் தடுத்து நிறுத்த திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எடுத்த அனைத்து இராச்சிய முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இரு தனி மனிதர்களின் ஆணவமும் போர் வெறியும் இன்று மனித உயிர்களை அழித்துக் கொண்டிருக்கின்றது. போரை நிறுத்துங்கள் என்ற தமது கோரிக்கையைப் பாப்பரசர் நிறுத்திவிடாது இன்னும் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். உலக சமாதானத்தைக் கருத்தில் கொண்டு பாப்பரசரின் இந்த வேண்டுகோளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மனித உயிர்களை அழிவில் இருந்து காக்க வல்லவர் இறைவன் ஒருவரே என்ற நம்பிக்கையோடு இப்போர் நிறுத்தப்பட உருக்கமாகச் செபிப்போம்.



### புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டும் நடைமுறைப்படுத்தலும்

எம் மண்ணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு கடந்து விட்ட நிலையிலும் நிலைமைகள் இன்னும் முழுமையாக அமைதியையும், சமாதானத்தையும், இயல்பு வாழ்வையும் பெற்றுக் கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நகர்ந்து கொண்டிருந்தாலும் இடையே இடையே நடைபெறுகின்ற அசம்பாவிதங்களும், அடாவடித்தனங்களும், யுத்த நிறுத்த மீறல்களும் எம்மைப் பயமுறுத்திக் கொண்டே இருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நகர்ந்து செல்ல புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறுபுறம் முழுமையாக நடைமுறைப்படுத்துவது இருதரப்பினருக்கும் இடையிலான சமாதான நிலையை நீடிக்க உதவும். தமிழ் மக்களின் நாளைய சுபீட்சமான சமாதான வாழ்வை கருத்தில் கொண்டு இரு தரப்பினரும் இதில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம்.

### உயர் பாதுகாப்பு வலயமும், மீள்குடியேற்றமும்

இராணுவ பாதுகாப்பு என்கிற போர்வையில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்து தமிழ் மக்கள் பலரைத் தம் சொந்த இல்லிடங்களுக்குச் செல்ல விடாமல் தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமானது என்று எண்ணத் தோன்றுகின்றது. உயர் பாதுகாப்பு வலயங்களைத் தமது வதிவிடங்களாக் கொண்டு வாழ்ந்த தமிழ மக்களை மீளவும் தம் சொந்த இடங்களில் பரீட்சார்த்தமாக வேனும் குடியமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற எமது வேண்டுகோளை மீளவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

### யாழ்.நகர மையப்பகுதி இராணுவ முகாம்

யாழ். நகரின் மையப்பகுதியில் அமைக்கப்படவிருந்த இராணுவ முகாம் பலரின் எதிர்ப்பையும் வேண்டுகோளையும் அடுத்து நிறுத்தப்பட்டது நிம்மதியைத் தருகிறது. இராணுவ முகாமினை அமைக்க திட்டமிட்ட இந்த இடம் யாழ் நகரத்திற்கு அழகையும் தூய காற்றையும் மன அமைதியையும் தருகின்ற ஒரு கடற்கரைப்பிரதேசமாகும். அப்பிரதேசத்தினை மரங்கள் நிறைந்த திறந்த வெளியாக மக்கள் இளைப்பாற இடமளிக்கும் விதமாகத் தயார் செய்வதே சிறந்ததாகும். மாநகர சபைக்குச் சொந்தமான வேறு காணிகளில் பொதுசன அமைதியையும் பாதுகாப்பையும் குழப்பாத வகையில் தனிமையான ஓர் இடத்தில் இவ் இராணுவ முகாமை அமைப்பதே பொருத்தமானதாகும்.

எப்போ எம் மண்ணில் நிரந்தர சமாதானம் நிலவப் போகிறது? என ஏங்கிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாடு கவலை தருவதாகவே இருக்கிறது. பல முற்போக்கு சிங்கள அரசியல் கட்சிகளும் பௌத்த மதத் தலைவர்களும் தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் வழங்க எப்போதும் முட்டுக்கட்டைபோடுவதையே தமது பணியாகக் கொண்டிருப்பதும் வேதனை தருவதாக இருக்கிறது.

### ஊடகங்களின் செயற்பாடு

ஊடகங்கள் எப்பொழுதும் நடுநிலைமையோடு செயற்படுவதே தர்மமாகும். சில தென்பகுதிப் பத்திரிகைகள் செய்திகளைத் திரித்தும், மிகைப்படுத்தியும் பக்கம் சார்ந்தும் வெளியிடுவது சமாதான முயற்சிகளை இன்னும் பின்னடையவே செய்யும். சமாதானத்துக்கு எதிராக செயல்படுபவர்களும் குரல் கொடுப்பவர்களும் தம் நிலையை மாற்றிக் கொள்ள இறைவன் அருள் புரிவாராக.

காலம் நீண்டு போகின்ற போது விடயங்கள் கனிந்து வருவது கடினமாகி விடலாம். உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். பிரதமர் மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இடைவிடாத முயற்சியும் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் சமாதான முன்னெடுப்பும் கூடிய விரைவில் முழு வெற்றியடைய இறைவன் தன் வல்லமை மிக்க கரத்தால் அருளாசி வழங்குவார். உயிர்த்த இயேசு எம் மண்ணிற்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினைத் தர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

**யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம்**

# பரமபிதா காட்டிய பாதை

# வாகன வசதியில்லை

(ஊர்காவற்றுறை)

வேலணை கால்நடை வைத்திய நிலையத்திற்கு வாகன வசதியில்லாமையினால் முழுமையான சேவையினை வழங்க முடியாதுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி வைத்தியநிலையம் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கென உரியாதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

# இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம்

## களுத்துறை மாவட்டத்தில் அமையும்

(கொழும்பு)

அமைச்சர் மகிந்த சமரசிங்க அண்மை

## சார்ஸ் அச்சுறுத்தல்

# கட்டுநாயக்க விமான நிலைய உத்தியோகத்தர்கள் உசார்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சார்ஸ் வைரஸ் தொற்று நோய் கிருமித் தாக்கத்துக்கு உட்பட்டோரை இனம் காண்பதற்கு விமான நிலைய சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நடவடிக்கை தொடர்பாக விமான நிலையத்தில் பணிபுரியும் குடிவரவு

பிலிப்பைன்ஸ், யப்பான் போன்ற நாடுகளில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வரும் பிரயாணிகள் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

கடந்த சனிக்கிழமையன்று இவ் விமான நிலையத்தில் வந்திறங்கிய பிலிப்பைன்ஸ், யப்பான் போன்ற நாடுகளின் பிரஜைகள் சார்ஸ்

திருந்தது. அதாவது, இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக நாளை அமெரிக்காவில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்குபற்றுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளும் அரசும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்ததால்-விடுதலைப் புலிகளோடு இணைந்து புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதென்ற உடன்பாட்டின் அடிப்படையில்,உலக நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்க முன்வந்துள்ள போது,அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு விடுதலைப்புலிகள் அழைக்கப்படவில்லையாயின் அம்மாநாட்டில் எந்தப் பயனும் இல்லை என்பதோடு, இதற்குப் பின்னணியில் இந்தியாவும் அமெரிக்காவும் இருக்க அதற்குத் துணையாக இலங்கை அரசும் நோர்வேயும் பக்கவாத்தியம் போடுவது சமாதான முயற்சிகளையும், அதன் சார்பாக நடைபெறுகின்ற நிதியுதவி மாநாடுகளையும் அர்த்தமற்றதாக்கி விடும்.

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் களுத்துறை மாவட்ட மத்துஹமப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

5ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ள இவ்விமான நிலையத்திற்கான நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, நகரசபை,தேசிய முதலீட்டுச் சபை என்பவற்றின் உயர் அதிகாரிகள் என்போருடன் தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கா அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

சர்வதேச விமான நிலையம் ஒன்றில் இருக்கும் சகல வசதிகளும் இங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது. 2 ஆயிரம் தொழில் பேட்டைகளும் 56 ஆயிரம் மாடி வீடுகளும் அதன் சுற்று வட்டாரத்தில் அமைக்கப்படவுள்ளன.

இலங்கையின் சர்வதேச விமான நிலையமாக கட்டுநாயக்க விமான நிலையம் ஒன்றே தற்போது இருந்து வருகிறது. (உ-8)

நிலையத்தில் பணிபுரியும் குடிவரவு அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூர், சீனா, ஹொங்கொங், நாடுகளின் பிரஜைகள் சார்ஸ் தொற்று நோய்க்கு உள்ளாகி இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. (உ-8)

## தினசரி தியானம்

### உடல் நலம்

உடல் நலம் இல்லாமல் வாழ்க்கையாகிய பெருங்கடலின் ஆழத்தில் புகுந்து ஆய்ந்து, முடிவில்லாப் பேரின்பம் பெற முடியாது. நாள்தோறும் பதினைந்து நிமிடமாவது முறையாகச் செய்து வரும் யோகப் பயிற்சிகள் உங்களை எப்போதும் எதற்கும் தகுதியுள்ளவராக வைத்திருப்பதுடன், உங்களது உடலையும், உள்ளத்தையும் உறுதிப் படுத்தவும் செய்யும். யோகாசனங்களால் நீடித்திருக்கும் நோய்கள் அடியோடு அழிக்கப்படுகின்றன.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

### "என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்"

குருத்தோலை ஞாயிறு பாடுகளின் ஞாயிறு என்று அழைக்கப் படுகின்றது.''என்னைப் பின்பற்ற விரும்புகிறவர் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். சிலுவை நமக்கு நாம் அன்றாடம் அனுபவிக்கும் துன்பங்களே. இவைகளை சந்திக்க துணிவின்றி சந்தியிலே வீசிவிட விரும்புகிறோம். எப்போதும் துயரின்றி வாழ்வதே நம் கனவு. இயேசு சிலுவைத் துன்பத்தின் மூலமே மனிதருக்கு மீட்பையும் முழுவாழ்வையும் கொடுத்தார். நமது துன்பங்களையும் இத்தோடு இணைத்து வாழ்ந்தோமெனில், ஒவ்வொரு துன்பமும் இயேசுவின் சிலுவையின் ஒரு துண்டு என்பதை உணர்ந்து கொள்வோம். அவைகள் நமக்கும்,பிறருக்கும் வாழ்வு கொடுப்பனவாய் மாறும். துன்பங்களைக் கண்டு நாம் துவண்டு விடுவதாலே போராட்டங்களின் மத்தியில் குழைந்து விடுகிறோம். குழம்பிப் போகிறோம். இதனால் எதிரியாகிய தீமைக்கு அடிமையாகிறோம். இரத்த வியர்வை வியர்த்த பின்னும் இயேசு அயர்ந்து போகவில்லை. மாறாக இலக்கில் நிமிர்ந்து நிற்கிறார். நோயோ, நொடியோ, அதிர்ச்சியோ,அவலமோ, கண்ணீரோ, கவலையோ இன்றி தீமைகளின் தாக்குதல்களை இயேசு சிலுவையில் வென்று விட்டார். இவைகளைத் துணிவுடன் தாங்கும் போது நம் கால்கள் உறுதிபெறும். இதயம் அதிர்ந்து விடாது இயங்கும். மனம் மயங்காது இலக்கை நோக்கி நடக்கும். இதுவே தீமையை வெற்றி கொள்ளும் ஒரேவழி. இறையரசை இதயங்களில் நிறுவும் நெறி.

**காவலன்**

## புதுவருடப்பிறப்பு கருமம்

**வாக்கிய பஞ்சாங்கப்படி புதுவருடப் பிறப்பு**

சித்திரை மாதம் முதலாம் திகதி 14.04.2003 திங்கட்கிழமை மு.ப. 9.52மணிக்கு பூர்வ பட்ச திரியோதசித் திதியும்,பூர நட்சத்திரமும் கூடிய வேளையில் இடப இலக்கினத்தில் கன்னி நவாம்சத்தில் புதிய சுபானு வருடம் பிறக்கின்றது.

**திருக்கணித பஞ்சாங்கப்படி புதுவருடப் பிறப்பு**

சித்திரை மாதம் முதலாம் திகதி 14.04.2003 திங்கட்கிழமை பிற்பகல் 12.17மணிக்கு பூர்வ பட்ச திரயோதசி திதியும்,பூர நட்சத்திரமும் கூடிய வேளையில் மிதுன இலக்கினத்தில் புதிய சுபானு வருடம் பிறக்கின்றது.

**புண்ணிய காலத்தில் யாவரும் கடைப் பிடிக்க வேண்டியது.**

காலையில் சரிகர்ப்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் விளாஇலையும்,காலில் கடம்பமிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளை கலந்த புதிய ஆடை அணிந்து அறம்,பொருள்,இன்பம் என்பவற்றைச் சிந்தித்து வழிபடும் கடவுளைத் தியானித்து பெரியோரை வணங்கி பொங்கல் செய்து சூரியனை வழிபட்டு உற்றார் உறவினர் நண்பர்களுடன் இன்பமாக உறவாடி அறுசுவை உண்டிகளை உண்டு தாம்பூலம் அருந்தி நற்கருமங்களைச் செய்யலாம்.

**சரிகிரம தோச நட்சத்திரங்கள்**

பரணி,மகம்,பூரம்,உத்தரம் முதலாம்,பூராடம்,உத்தராடம் 2,3,4ம், திருவோணம்,அவிட்டம் 1ம்,2ம்,கால்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து தோசத்தை நிவர்த்தி செய்யலாம்.

**மருத்து நீர்**

தாளம் பூ,தாமரைப் பூ,மாதுளம் பூ,துளசி,விஷ்ணு கிராந்தி,சீதேவியார்,செங்கழுநீர்,வில்வம்,அறுகு,பீர்க்கு,பால்,கோசலம்,கோமயம்,கோரோசனை, மஞ்சள்,மிளகு,திற்பிலி,சுக்கு, என்பவற்றை சுத்த ஜலத்தில் இட்டு காய்ச்சிக் கொள்க.

### கைவிசேசம்

**வாக்கிய பஞ்சாங்கம்**

14.04.2003 திங்கள் பி.ப. 2.22-4.10மணிவரை
14.04.2003 திங்கள் மு.இ.9.13-10.23மணிவரை
16.04.2003 புதன் பி.ப. 2.39-4.12மணிவரை

**திருக்கணிதம்**

14.04.2003 திங்கள் பி.ப.4.25-4.46மணிவரை
14.04.2003 திங்கள் பி.ப.4.58-6.34 மணிவரை
16.04.2003 புதன் மு.ப.6.34-7.46மணி வரை.

### சமஷ்டி குறித்து ஆராயச் சென்ற

# புலிகளின் அரசியல் விவகாரக் குழு இன்று நாடு திரும்புகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளின் 21 பேர் அடங்கிய அரசியல் விவகாரக்குழுவினர் தற்பொழுது டென்மார்க்கிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் டென்மார்க்கின் அரசியல் அமைப்பு மற்றும் ஆட்சி முறை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

இவர்கள் டென்மார்க்கின் படைத்துறை அமைச்சுக்கு விஜயம் செய்து அங்கு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இக் கலந்துரையாடலில் அரசுக்கும் பாராளுமன்றத்துக்குமான கடப்பாடுகள் அடிப்படை நடைமுறை விடயங்கள் மற்றும் அரசியல் அமைப்புக்கும் பாதுகாப்புத் துறைக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் டென்மார்கின் பரிபாலனத்துக்குட்பட்டிருக்கும் கிறீன்லாந்து தீவின் அதிகாரிகளுடனும் புலிகள் தரப்பினர் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை,விடுதலைப்புலிகளின் அரசியல்விவகாரக்குழுவினர் தமது விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அரசு- புலிப் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்திப்பர்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம் மாதம் 24ம் திகதி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசு பிரதிநிதிகளுக்குமான சந்திப்பு ஒன்று நடை பெறவுள்ளது.

யுத்த சூனியப் பிரதேசமான வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 24ம் திகதி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் தலைமையில் இச் சந்திப்பு நடை பெறவுள்ளது. (ம)

## டோக்கியோ...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அரசும்,விடுதலைப் புலிகளும் புனர்வாழ்வு,புனரமைப்பு வேலைகளில் இணைந்து செயலாற்ற வேண்டும்-சர்வதேச நாடுகளின் உதவிகளை இருதரப்பும் இணைந்து கோரவேண்டும்-, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட உறுதி மொழி கடைப்பிடிக்கப்படவில்லை-இந் நிலையில் வாஷிங்டனில் நடை பெறவுள்ள மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தனிமைப்படுத்த இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி குறித்து கலந்துரையாடப்படவுள்ள வாஷிங்டன் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது பரஸ்பர நம்பிக்கையை இழக்கச் செய்திருப்பதுடன் இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பை இலங்கை அரசும் அனுசரணையாளரான நோர்வேயும் உறுதிப்படுத்தாமை எமக்கு அதிருப்தியை அளித்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் புனர்வாழ்வு,ஆகிய வேலைகளில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணைந்து செயலாற்ற முடிவு செய்திருந்தமை பலராலும் பாராட்டப்பட்டிருந்தது.இத்தகைய பாராட்டு இரு தரப்பினரும் நம்பிக்கையை வளர்ப்பதாக உணரப்பட்டது.

ஆனால்,தற்போது வாஷிங்டன் மாநாட்டில் விடுதலைப் புலிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது இலங்கை அரசின் நோக்கம்,அதன் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.தமிழ் மக்களின் வீடுகள் வழிபாட்டுத் தலங்கள் ஆகிய இடங்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பது 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டை,பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளை அரச படைகள் மீறிவருவதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அழிந்து போனவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்குச் சர்வதேச உதவிகள் எமக்குத் தேவைப்படுகின்றது.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் வாஷிங்டன் கூட்டத்திற்கு அழைக்கப்படாமையினால் ஜுன் மாதம்

## இந்தியத் தூதுவர்...

இது தொடர்பான முடிவை அரசு அறிவித்துள்ளதாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூதுவர் லலித் கோன்சிங் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும்,வெளிநாட்டு சேவைகளின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியாகவும் முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

**The Royal College of Jaffna**

ஆண்டு 1ல் இருந்து மேற் படிப்பு வரை

426,(302) K.K.S Road,
Jaffna [6630]

## கைதடிச்...

இதற்கமைய நேற்று முன் தினமிரவு 11மணிக்கு சைவச் சிறுவர் இல்லத்திற்குச் சென்ற பொலிஸார், விடுதிப் பொறுப்பாளர் வைத்திலிங்கம் தர்மராசதுரை (வயது64) என்பவரை பெண்கள் தங்கும் விடுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

அத்துடன் விடுதியில் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் அங்கு தங்கியிருந்த 22 சிறுமிகளையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதித்துள்ளனர்.

பிரஸ்தாப சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டார்களா என்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே பொலிஸார் அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 6முதல் 18 வயது வரையான சிறுமிகள் அடங்குகின்றனர்.

இவர்களில் 13 வயதுச் சிறுமி ஒருத்தி விடுதிப் பொறுப்பாளர் தர்மராசதுரை தன்னைப் பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுத்தினார் என வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதியில் நடை

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணிதப்பிரிவு மாணவர்களுக்கான இணைந்த கணித பாடவிதானத்திற்கான வழிகாட்டற் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3மணிக்கு நல்லூர் அறிவொளி கல்வி நிறுவனத்தின் ஆதரவில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஸ்ரீசற்குணராசா கருத்துரை வழங்கவுள்ளார். (இ)

## இலங்கையின்...

கோபி அனான் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நாளை நடைபெறவுள்ள முன்னோடி உதவி வழங்கும் மாநாட்டிற்கு தனது பிரதிநிதி ஒருவரை அனுப்புவதாகவும்,டோக்கியோ மாநாட்டிற்கு தனது சிரேஷ்ட பிரதிநிதி ஒருவரை அனுப்புவதாக மிலிந்த மொறகொடவிடம் அனான் உறுதி அளித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஐ.நா அபிவிருத்தித் திட்டம் ஐ.நா.சிறுவர் கல்வி நிலையம் உட்பட பல்

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்விகோரல்**

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**மாதாந்த கேள்வித் தொகை**

| 2003 ஏப்ரல் | 2003 மே | 2003 ஜுன் |
|---|---|---|
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.04.15ம் திகதி தொடக்கம் 2003.04.29ம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்

வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதியில் நடைபெற்ற இப் பாலியல் துர்நடத்தைக்கு உடந்தையாகச் செயற்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் விடுதியில் பணிபுரிகின்ற பெண்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
(இ-6,7)

...தர் சமாதானத்தை ஏற்படுத்த ஐ.நா அபிவிருத்தித் திட்டம் ஐ.நா.சிறுவர் கல்வி நிலையம் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு உதவி வழங்க முன்வந்துள்ளதையிட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சார்பாக நன்றி தெரிவிப்பதாக கோபி அனானிடம் அமைச்சர் மிலிந்த மொறகொட கூறினார். (இ-5)

இந் நிலையில் விடுதலைப் புலிகள் வாஷிங்டன் கூட்டத்திற்கு அழைக்கப்படாமையினால்,ஜுன் மாதம் டோக்கியோவில் நடை பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகள் மீள் பரிசீலனை செய்வர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ம)


ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

⁂அரசியல் கட்டுரைகள்
⁂அறிவியல் ஆக்கங்கள்
⁂கவிதைக் கலசம்
⁂வியாசரின் பதில்கள்
⁂மகளிர் உலகம்
⁂சிறுவர் அரங்கம்

இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
ஈழராஜா எல்லாளன்
தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்


யான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி. வைப்பாக (விலை கேள் முறி-**Bid Bond**) மெற்றிக் தொன் ஒன்றிற்கு **(01 Mt.)** ரூபா நானூறுபபடி (ரூபா 400.00) செலுததுதல் வேண்டும்.(விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை,மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்)என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது)அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.04.30ம் திகதி பி.ப.2.00மணிக்கு முன்பாக சேர்க்கவும் அன்றைய தினம் பி.ப.3.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4. நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி''என எழுதப்பட வேண்டும்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக(செயல் படுத்தல் முறிக்காக-**PERFORMANCE BOND**)செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.(விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம்.
(C/5992)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.